# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

2226 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகளுக்கும் பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் மேற்படி வர்த்தமானியைப் பார்க்கவும்

## பதவிகள் - வெற்றிடம்

### இலங்கைப் பொலிஸ்

உப பொலிஸ் பரிசோதகர் பதவி - விசேட அதிரடிப்படை

இலங்கைப் பொலிஸ் சேவையில் விசேட அதிரடிப் படையின் தகுதிகாண் உப பொலிஸ் பரிசோதகர் பதவி நேரடி ஆட்சேர்ப்புக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு பிரிவு, இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" அல்லது கட்டளை அதிகாரி விசேட அதிரடிப்படை தலைமையகம், இல. 223 பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு - 07" என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2021.05.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பி வைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்**.- ரூபா 32,790.00 - 7 x 370 - 2 x 495 - 25 x 660 - ரூபா 52,870.00.

பொது நிர்வாக சுற்றுநிருபம் இலக்கம் 3-2016 இன் பிரகாரம் வருடாந்த சம்பள அளவுத்திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

மேலும், இவ்வுத்தியோகத்தர்கள் 2013.01.07 ஆந் திகதிய பொலிஸ் மா அதிபர் சுற்றுநிருப இலக்கம் 2416/2013 இன் பிரகாரம் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு உரித்துடையவராவர். மேற்குறிப்பிட்ட சம்பளத்திற்கு மேலதிகமாக கீழ்வரும் கொடுப்பனவுகளை மாதந்தோறும் பெறுவதற்கும் உரித்துடையவராவர் :

| | | |
|---|---|---|
| (அ) | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : | ரூபா 7,800.00 |
| (ஆ) | இடைக்காலக் கொடுப்பனவு : | ரூபா 2,500.00 |
| (இ) | ஆரம்ப சம்பளத்தில் 40% கொடுப்பனவு : | ரூபா 13,116.00 |
| (ஈ) | ஊக்குவிப்பு கொடுப்பனவு : | ரூபா 1,500.00 |
| (உ) | ஆரம்ப சம்பளத்தில் 33% கொடுப்பனவு | ரூபா 10,820.70 |
| (ஊ) | வேறு கொடுப்பனவுகள் | ரூபா 6,123.20 |
| (எ) | கடினக் கொடுப்பனவுகள் | ரூபா 2,000.00 |
| (ஏ) | இணைந்த கொடுப்பனவுகள் : | ரூபா 12,000.00 |
| (ஐ) | திருமணமானவருக்கான கொடுப்பனவு | ரூபா 300.00 |
| (ஒ) | சீருடைகள் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு | ரூபா 250.00 |

இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளி நாடுகளிலும் வைத்திய சிகிச்சைகளை பெறுவதற்கு நிதி மூலமான உதவித்தொகைகளைப் பெற்றுக்கொள்ளலாம் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்வதற்கான வசதிகள் ;

(ஏ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகளுடன், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

(ஊ) விசேட அதிரப்படையின் அடிப்படை பயிற்சியை முடித்து விசேட அதிரடிப் படையின் சேவையில் ஈடுபடும் காலப்பகுதியில் மாத்திரம் விசேட அதிரடிப் படையின் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் விசேட கொடுப்பனவுகளைப் பெறுவதற்கான உரிமையுண்டு.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

4.1 **வயதெல்லை**.- வர்த்தமானி அறிவித்தலின்படி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 18-26 வயதிற்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஏற்கனவே இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் சேவையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு விண்ணப்ப முடிவுத் திகதியன்று 28 வயதிற்கு உட்பட்டவர்களாக இருந்தால் அவர்களும் விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்.

4.2 **கல்வித் தகைமைகள்**.-

* க. பொ. த. (சா. தர) பரீட்சையில் கணிதம் மற்றும் தாய்மொழி உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும் ;

* க. பொ. த. (உ. த.) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**குறிப்பு** 1- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் வகைப்படுத்தலின்படி பாடங்களின் எண்ணிக்கையை வகைப்படுத்தும்போது விஞ்ஞான பாட இலக்கங்கள் 41 உம் 44 உம் ஒரு பாடமாகவும், இல. 42, 45 ஐக் கொண்ட கணித பாடங்கள் ஒரு பாடமாகவும் கருதப்படும். க. பொ. த. (சா.தர) பரீட்சையில் சித்தியடைந்த பாடங்களின் எண்ணிக்கை அதன் பிரகாரம் தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு** 2-க.பொ. த. (சா.தர) பரீட்சையில் எழுத்துப் பரீட்சையில் தொழில்நுட்பப் பாடத்தில் சித்தியடையாமல் அதே பாடத்தில் செயல்முறைப் பரீட்சையில் சித்தியடைந்திருந்த போதும் அப்பாடத்தில் சித்தியடையாதவராகக் கருதப்படுவார்.

**குறிப்பு** 3-விருப்பத்திற்குரிய தமிழ்/ஆங்கிலம்/ சிங்களம் ஆகிய பாடங்கள் க. பொ. த. (சா. தர) பாடத் திட்டத்திற்குள் உள்ளடக்கப்படாமையால் அப்பாடங்களில் சித்திபெறுதல் க. பொ. த. (சா. தர) பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களாக கருதப்படமாட்டாது.

4.3 **உடற்தோற்றம்** :

* உயரம் : 05 அடி 06 அங்குலம் (குறைந்தது)
* மார்பளவு : 32 அங்குலம் (குறைந்தது மூச்சுக்காற்று அற்ற)

4.3.1 ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் கடமையாற்றவும் பதவியின் கடமையினை நிறைவேற்றவும் போதியளவு மன தைரியமும் உடலுறுதியும் இருத்தல் வேண்டும்.

4.3.2 **கட்புல தொழிற்பாடு**.- மூக்குக் கண்ணாடி ஒரு சோடி அல்லது கண்வில்லை இன்றி ஒவ்வொரு கண்ணினதும் குறைந்தளவு பார்வை 6/12 இற்கு குறையாதிருத்தல் வேண்டும். ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவிருக்கும் போது மற்றைய கண்ணானது 6/18 ஆகவிருத்தல் வேண்டும்.

4.3.3 பொலிஸ் சேவையின் கௌரவத்திற்கு பொருந்தாத மற்றும் கடமைக்குத் தடையான வகையில் அறுவைச் சிகிச்சை மூலம் உடலுறுப்புக்கள் பொருத்தப்பட்ட ஊனமுற்றவராக அல்லாதிருத்தல் வேண்டும்.

4.4 **வேறு தகுதிகள்** .-

4.4.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4.4.2 விண்ணப்பதாரி குற்றச்செயல்களில் ஈடுபடாத ஒழுக்கமானவராக இருத்தல் வேண்டும்.

4.4.3 விண்ணப்பதாரி திருமணமாகாதவராக இருத்தல். (விவாகரத்துப் பெற்றவர்கள், தபுதாரர்கள் மற்றும் திருமணமாகாத பிள்ளைகள் அற்றவர்களாக இருத்தல் வேண்டும்.)

4.4.4 நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் கடமையாற்ற தயாராக இருத்தல் வேண்டும்.

4.4.5 பதவிக்கு சேர்வதற்கு தேவையான 4:1, 4:2 ஆகிய தகுதிகளை விண்ணப்பப்படிவம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும் என்பதுடன் 4.4 இல் கோரப்பட்டுள்ள தகுதிகள் சேர்த்துக் கொள்ளப்படும் தினத்தன்று அவ்வாறே இருத்தல் வேண்டும்.


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழை திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2021, மே மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2021, மே மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரனியல் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2021 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

5. **ஆரம்ப பரீட்சை.**- விண்ணப்பம் செய்துள்ள விண்ணப்பதாரிகள் மத்தியில் தகுதிகளையும் வயதெல்லையையும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே ஆரம்ப பரீட்சைக்கு அழைக்கப்படுவர். அப்பரீட்சையில் பந்தி 4.3 (4.3.2 மற்றும் 4.3.3 தவிர்ந்த) மற்றும் 4.4 (4:4:2 மற்றும் 4.4.4 தவிர்ந்த) தகுதிகள் பரிசீலிக்கப்படும்.

ஆரம்ப பரீட்சைக்கு சமுகமளிக்கும் விண்ணப்பதாரிகள் பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும் சபையினால் நடாத்தப்படும் தேகாரோக்கிய பரிசோதனைக்கு சமுகமளித்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தேகாரோக்கிய பரிசோதனையின் போது அதற்கு முகம் கொடுக்க தகுதியானவர்கள் என அழைப்புக் கடிதத்துடன் இணைத்து அனுப்பப்படும் விண்ணப்பம் இலங்கை வைத்திய சபையில் பதிவு பெற்ற வைத்தியரின் சிபாரிசுக் கடிதத்துடன் அவ்வேளையிலேயே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

| செயற்பாடு | காலம் | புள்ளிகள் |
|---|---|---|
| ஓட்ட தூரம் /Run meters 1000 மீற்றர் | 03 நிமிடங்களிற்கு குறைவாயின் | 30 |
| | 03-04 நிமிடங்களிற்கிடையில் | 20 |
| | 04-05 நிமிடங்களிற்கிடையில் | 10 |
| Chinup (05 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 03 புள்ளிகள் படி ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| Pushup (15 தடவைகள்) | 01 நிமிடம் | தடவைக்கு 01 புள்ளிப்படி கூடியது 15 புள்ளிகள் |
| Situp (15 தடவைகள்) | 01 நிமிடம் | தடவைக்கு 01 புள்ளிப்படி கூடியது 15 புள்ளிகள் |
| Squat Thrust (15 தடவைகள்) | 01 நிமிடம் | தடவைக்கு 01 புள்ளிப்படி கூடியது 15 புள்ளிகள் |
| Kim Gem (ஞாபக சக்தியை பரிசோதித்தல் | தேர்வு செய்த வகைச் செயற்பாட்டை மேற்பார்வை செய்வதற்கு 30 நொடிகள், ஞாபக சக்திக்கு 30 நொடிகள், எழுத்துக்கு 120 நொடிகள் | ஒரு செயலிற்கு 01 புள்ளிப்படி ஆகக்கூடியது 10 புள்ளிகள் |

**குறிப்பு.**- 1000 மீற்றர் தூரத்தினை 05 நிமிடங்களில் ஓட இயலாத விண்ணப்பதாரிகள் தேகாரோக்கிய பரீட்சையில் சித்தியடையாதவர்களாக கணிக்கப்படுவர். அத்துடன் மேற்குறிப்பிட்ட பரீட்சையில் 100 இற்கு 60 புள்ளிகள் வெட்டுப் புள்ளிகளாக கருதப்பட்டு அதற்கு மேல் எடுக்க வேண்டும்.

* தன்னம்பிக்கையை சோதிப்பதற்கான பரீட்சை (தடைகள் ஊடுருவல் பயிற்சி)
* ஆரம்ப சக்தி மற்றும் பிரதிபலிப்பு சம்பந்தமான பரீட்சை

06. **எழுத்துப் பரீட்சை.**- ஆரம்ப பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்துப் பரீட்சை கீழ்வரும் பாடங்களில் இடம்பெறும்.

| பாடங்கள் | ஆகக்கூடிய புள்ளிகள் | காலம் | சித்தியடையத் தேவையான புள்ளி வீதம் |
|---|---|---|---|
| 01. புரிந்துணர்வு மற்றும் மொழித்தேர்ச்சி | 40 | 45 நிமிடம் | 40% |
| 02. பொது அறிவும் புத்தி கூர்மைக்கான பரீட்சை | 60 | 1 மணித்தியாலம் | |

07. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.**- ஆரம்ப பரீட்சையிலும் எழுத்துப் பரீட்சையிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அனுப்பப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையானது பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | ஆகக்கூடிய புள்ளிகள் |
|---|---|
| 1. மேலதிகக் கல்வித் தகைமைகள் | 15 |
| 2. தொழில் தகைமைகள் | 15 |
| 3. மொழித் தகைமைகள் | 10 |
| 4. விளையாட்டுத் திறமைகள் | 20 |
| 5. தலைமைத்துவம்/பொது சேவைகள் | 20 |
| 6. நேர்முகப் பரீட்சை சபையின் பாராட்டு | 20 |
| மொத்தம் | 100 |

08. **இணைத்துக்கொள்ளப்படும் முறை.**- எழுத்துப் பரீட்சையிலும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளை கூட்டி விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளை அவரோகண முறைப்படி பட்டியல் தயாரிக்கப்படும். அப்புள்ளிகள் வரிசைப்படுத்தப்பட்டு அதன் படி வெற்றிட எண்ணிக்கையின் 125% விண்ணப்பதாரிகள் கணக்கெடுத்து பின்னணிப் பரீட்சைக்கும் மற்றும் வைத்திய பரீட்சைக்கும் அழைக்கப்பட்டு அதில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மூலம் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பதவிகளிற்குச் சேர்த்துக்கொளள்ப்படுவர்.

**குறிப்பு.**- மேற்படி திட்டத்திற்கு புறம்பாக உள்ளூர், சர்வதேச மட்டத்தில் தேசிய மட்டத்தில் அல்லது விஷேட விளையாட்டுத் திறமையினைப் பெற்றுள்ள அல்லது வேறு துறைகளில் சிறப்பான அல்லது திறமையினை வெளிப்படுத்தியுள்ள விண்ணப்பதாரி ஒருவரின் உயரம் மற்றும் மார்பளவு சம்பந்தமான தகைமைகள் கவனத்தில் கொள்ளாது ஏனைய தகுதிகள் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் அதிகாரமளிக்கப்பட்ட தேர்வு அதிகாரியின் தீர்மானத்திற்கமைய இணைத்துக் கொள்ளப்படுவார்.

09. **பின்னணிப் பரீட்சை.**-

9.1 எழுத்துப் பரீட்சையிலும் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளை கூட்டி விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளை அவரோகண முறைப்படி தயாரிக்கப்பட்டு அப்புள்ளிகள் வரிசைப்படுத்தப்பட்டு அதன் படி வெற்றிட எண்ணிக்கையின் அடிப்படையில் விண்ணப்பதாரிகளின் ஏதேனும் பாதகமான அறிக்கைகள் சம்பந்தமாக பின்னணிப் பரீட்சை மேற்கொள்ளப்படும்.

9.2 இங்கு விண்ணப்பதாரியின் பாதகமான அறிக்கைகள் உறுதிப்படுத்திக் கொள்ள அவரும் அவரது நெருங்கிய உறவினர்கள் அவருடன் நெருங்கிப் பழகியவர்களதும் பாதகமான அறிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் சம்பந்தமாக விசாரணை செய்யப்படும் என்பதுடன் பாதகமான அறிக்கைகள் உடைய விண்ணப்பதாரிகள் இணைத்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

9.3 ஆட்சேர்ப்பின் போது விண்ணப்பதாரிகள் பொய்யான தகவல்களை வழங்குதல் அவர் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகுதியன்று. பொய்யான தகவல்களை வழங்கியமை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எந்த வேளையிலும் அவர்கள் சேவையிலிருந்து அகற்றப்படுவார்.

10. **வைத்தியப் பரீட்சை.**- பாதமான அறிக்கையற்ற விண்ணப்பதாரிகள் மட்டுமே வைத்திய பரிசோதனைக்கு அழைக்கப்படுவர். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள். பொலிஸ் வைத்தியசாலையின் பிரதான வைத்திய அதிகாரியுள்ளிட்ட வைத்திய சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். இங்கு விண்ணப்பதாரிகள் பொலிஸ் கடமைக்கு தகுதியானவரென உடற்தேர்வு மற்றும் மனநல சௌக்கியம் சம்பந்தமான பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவர். வைத்திய பரீட்சைக்கு ஒரு தரம் மட்டுமே உட்படுத்தப்படுவர். வைத்திய பரீட்சை சுகாதார பத்திரம் 169 இற்கமைய மேற்கொள்ளப் படும். வைத்திய சபையினால் நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகள் மேன்முறையீடு செய்ய முடியாது.

11. **பயிற்சி.**-

11.1 மேற்படி பரீட்சைகள் அனைத்திலும் சித்தியெய்திய விண்ணப்பதாரிகள் மட்டுமே காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைய பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும் தினத்தில் பயிற்சிக்கு அழைக்கப்படுவர். அடிப்படை பயிற்சிகள் இலங்கைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் நடாத்தப்படுவதுடன் அதன் பின்னர் கட்டாய சேவைப் பயிற்சிக் காலம் நிறைவடையும் வரை அத்துறைக்குரிய பயிற்சி வழங்கப்படும்.

11.2 அடிப்படை பயிற்சிகளை வெற்றிகரமாக முடிக்கத் தவறும் உத்தியோகத்தர்களின் அடிப்படை பயிற்சிக் காலத்தை நீடித்தல் அல்லது தேவைக்கேற்ப நியமனம் இரத்துச் செய்தல் என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்.

12. **பதவியின் தன்மை.**- நிரந்தரமானதும் ஓய்வூதியம் கொண்டதுமாகும். (ஓய்வூதிய வேதன முறைமை சம்பந்தமாக அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களிற்கு கீழ்படிதல் வேண்டும்.)

13. **சேவை நிபந்தனைகள்.**-

13.1 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் மேற்குறித்த 13.3 பிரிவிற்கு கீழ்பட்டு மூன்று (03) வருடங்கள் பயிலுநர் சேவைக் காலத்தினை பூர்த்தி செய்தல் வேண்டும்.

13.2 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் அரச கரும மொழிக் கொள்கையினை தற்போதைய அமுலிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் ஏற்படுத்தப்படும் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளல் மற்றும் அதன் மூலம் அது சம்பந்தமாக கலந்துரையாடப்பட்ட ஏதேனும் கட்டளையின் மீது அதற்கு அனுகூலமாக செயற்படல் வேண்டும்.

13.3 தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் சுற்று நிருபம், தாபனக் கோவை ஒழுங்குப்படுத்தல் நிதி ஒழுங்கு விதிகள், அரசாங்க நிர்வாக சுற்றுநிருபங்கள் திறைசேரி சுற்றுநிருபம், இலங்கைப் பொலிஸ் கட்டளை, பொலிஸ் வர்த்தமானி அறிவித்தல், பொலிஸ் மா அதிபரின் சுற்றுநிருபம், பொலிஸ் ஆலோசனை சட்டங்களின் ஒழுங்கு விதிகள் மற்றும் நியமனக் கடிதத்திலுள்ள நிபந்தனைகளிற்குக் கட்டுப்படல் வேண்டும்.

13.4 பயிலுநர் சேவைக் காலமானது நியமனத் திகதியிலிருந்து முதல் 03 வருடங்கள் வலுவில் இருப்பதுடன் அக்காலத்திற்குள் உத்தியோகத்தர்களிற்கு திருமணம் முடிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது. திருமணம் முடிக்க முடியுமானது பொலிஸ் சுற்றுநிருபங்களில் வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளின் பிரகாரம் மட்டுமே. இந்த ஒழுங்கு விதிகள் மீறப்படும் பட்சத்தில் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

13.5 ஆட்சேர்ப்புச் செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சி நிறைவின் பின்னர் 05 வருடங்கள் கட்டாய சேவையினை மேற்கொள்ளல் வேண்டும். இந்த கட்டாய சேவைக் காலத்தை நிறைவு செய்யும் முன்னர் எவரேனும் ஏதேனும் பதவியிலிருந்து சுயமாக விலகிட முற்படுவாராயின் அவரிற்கான பயிற்சிகள் மற்றும் சீருடையுள்ளிட்ட ஏனைய செலவுகளிற்காக தீர்மானிக்கப்படும் தொகை. அனைத்தும் விலகிச் செல்வதற்கான கடிதத்தினை கையளிக்கும் போதே செலுத்தும் விருப்பத்தை தெரிவிக்கும் ஒப்பந்தத்திற்கு வருதல் வேண்டும். விலகிச் செல்வது சம்பந்தமாக திணைக்கள கட்டளை ஒழுங்கு விதிகள்/பொதுச் சேவை ஆணைக்குழுவின் சுற்று நிருப ஒழுங்குவிதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13.6 நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் பொலிஸ் சேவையில் முதல் தடவையாக இணைத்துக் கொள்ளப்படும் போது தன்னிடமிருக்கும் சொந்தச் சொத்துக்கள் அல்லது பெயரில் எழுதப்பட்ட அல்லது சட்டரீதியாக பாரமளிக்கப்பட்ட அல்லது எல்லாவிதமான சொத்துக்கள் சம்பந்தமாகவும் தன்னிடமுள்ள பொறுப்புக்கள் சம்பந்தமான விபரங்கள் தனது தனிப்பட்ட கோவையில் உள்வாங்க (திருத்தப்பட்ட) இலக்கம் 261 எனும் பொதுப் படிவத்தில் பதிவிட்டு பொலிஸ் மா அதிபரிற்கு அனுப்புதல் வேண்டும். உத்தியோகத்தர் திருமணம் முடித்தவுடன் மேற்கூறப்பட்ட விபரங்களையும் மனைவியினது விபரங்களையும் உள்ளடக்கி வழங்குதல் வேண்டும்.

மேலே விபரிக்கப்பட்டவாறு புதிய உரித்து அல்லது சொத்து கிடைக்கப்பெற்றால் அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட உரித்து அல்லது சொத்து சம்பந்தமாகவும் முழு விபரங்கள் தனது தனிப்பட்ட கோவையில் உள்ளடக்க ஒவ்வொரு உத்தியோகத்தரும் எழுத்துமூலமாக பொலிஸ் மா அதிபரிற்கு அறிவித்தல் வேண்டும்.

13.7 தகுதிகாண் உப பொலிஸ் பரிசோதகர்கள் இலங்கைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் அல்லது விசேட அதிரடிப்படை பயிற்சி முகாம் கட்டுக்குருந்தை பயிற்சியினை ஆரம்பித்தவுடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கு அமைவாக செயற்படுவேன் என்று உறுதிகூறி சத்தியப்பிரமாணம் கொடுத்தல் வேண்டும்.

14. நியமனம் நிரந்தரமாக்கல்.- நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களினதும் 03 வருட பயிலுநர் சேவைக் கால முடிவில் உத்தியோகத்தர்களின் தொழில் தருநரினால் நிரந்தர நியமனம் வழங்கப்படும். பயிலுநர் சேவை காலத்தில் முதலாவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடையாவிட்டால் உத்தியோகத்தரின் முதுநிலையானது மேலதிக கால அடிப்படையில் நடைமுறை விதிகளின்படி தீர்மானிக்கப்பட்டு சேவை நிரந்தரமாக்கப்படும்.

அப்படியானாலும் மேலதிக 03 வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய தவறும் உத்தியோகத்தர்களினது நியமனம் நிரந்தரமாக்குதல் அல்லது பயிலுநர் காலத்தை நீடிப்பது சம்பந்தமாக நியமனம் வழங்கும் அதிகாரம் பெற்றவர் தீர்மானித்தாலன்றி நியமனம் முடிவுறுத்தப்படும்.

15. **வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை.**-

வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை நடைமுறைப்படுத்தல் கீழ்வருமாறாகும்.

| வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை விபரம் | வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டியது எத்தனை வருட காலத்திற்கு முன்னர் | வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை தன்மை எழுத்து பரீட்சை தொழில் பரீட்சை/சன்றிதழ் பாடநெறி /வேறு |
|---|---|---|
| 1 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை (சேவையை நிரந்தரமாக்கு வதற்கான பரீட்சை) | உப பொலிஸ் பரிசோதகர் பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | எழுத்து, செய்முறை மற்றும் வாய்மொழி |
| 2 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | பொலிஸ் பரிசோதகர் பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கான வடிவமைத்தல் பயிற்சிப் பாடநெறி வெற்றிகரமாக பயின்று முடித்தல் |
| 3 ஆவது வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சை | பிரதான பொலிஸ் பரிசோதகர் பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கான வடிவமைத்தல் பயிற்சிப் பாடநெறி வெற்றிகரமாக பயின்று முடித்தல் |

16. **மொழிப் புலமை.-**

| மொழி | பெற்றுக்கொள்ள வேண்டிய புலமை |
|---|---|
| அரச கரும மொழி | அரச கரும மொழியல்லாத ஊடக மொழியில் சேவையில் இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் உரிய அரச கரும மொழித் திறனை நன்னடத்தைக் காலத்திற்குள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |
| ஏனைய அரச கரும மொழிகள் | அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் 01/ 2014 மற்றும் அதற்கு துணையான சுற்றுநிருபப்படி உரிய மட்டத்திற்கான திறனை பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். |

17. இவ்வர்த்தமானியின் பகுதி I (II அ) ஆம் பந்தியின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட அரசாங்க சேவை பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய பொது நிபந்தனைகள் செல்லுபடியாகும்.

18. விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் கடிதக் கோவைகளின் பிரதிகளை தமது விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும். (மூலப் பிரதிகளை சமர்ப்பித்தலாகாது)

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி ;
(இ) கல்வித் தகைமையை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்.

19. (அ) தற்சமயம் அரசாங்க உத்தியோகத்தில் இருக்கும் விண்ணப்பதாரிகள் அவர்களது விண்ணப்பத்தை உரிய நிறுவனத்தின் பிரதானி ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரி தேர்ந்தெடுக்கப்படுவாராயின் அவரை விடுவிக்க முடியுமென்ற சான்றிதழை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தினை 11 × 8 அங்குல அளவான வெள்ளைத் தாளில் தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி உரிய உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்ப் பிரதிகளுடன் மேலே இரண்டாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்குமாறு அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன் எந்தவிதமான காரணத்தினாலும் அது எவரேனும் உத்தியோகத்தரிடமும் தனிப்பட்ட ரீதியில் பாரம் கொடுத்தலாகாது.

20. இந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருக்கும் தேவைப்பாடுகள் எல்லாவகையிலும் உறுதிப்படுத்தத் தவறும் விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும். அவ்வாறான விண்ணப்பதாரிகளுக்கு அது சம்பந்தமாக பதில் அனுப்பப்படமாட்டாது.

**குறிப்பு**.- பரிசீலனை மற்றும் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளிற்கு போக்குவரத்துச் செலவோ அல்லது ஏனைய செலவுகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது.

சீ. டி. விக்ரமரத்ன,
பொலிஸ் மா அதிபர்.

அலுவலக உபயோகத்திற்கு

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இலங்கை பொலிஸ்**

பயிலுநர் உப பொலிஸ் பரிசோதகர் பதவி - விசேட அதிரடிப் படை

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களிலும் விண்ணப்பதாரரின் பிறப்புச் சான்றிதழில் உள்ளபடியும் இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :-----. | | | | | | | | | | | | |
(பிரதியை இணைக்கவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரரின் பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்துக்குரிய பிரதேச செயலகப் பிரிவு :-----.

மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரிக்குரிய பொலிஸ் நிலையம் :-----.
(உ) நிரந்தர முகவரிக்குரிய கிராம அலுவலர் பிரிவு :-----. பிரதேச செயலகம் :-----.
(ஊ) தொலைபேசி இலக்கம் வீடு :-----, கையடக்கத் தொலைபேசி இலக்கம் :-----.
(எ) மின்னஞ்சல் விலாசம் :-----.

6. (அ) இனம் :-----.

(ஆ) நீங்கள் பிறப்பினால் இலங்கைப் பிரசையா ? அல்லது பதிவு மூலம் இலங்கைப் பிரசையா ? (பதிவு மூலம் எனின் பதிவுச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்) :-----.

(இ) நீங்கள் வம்சாவளி மூலம் இலங்கைப் பிரசையானால் பிறந்த இடம் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தை வழி பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தை வழி முப்பாட்டன் :-----.

7. விண்ணப்பதாரரின் பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் பிரதியை இணைக்கவும்)

வயது (வர்த்தமானி அறிவித்தலில் தரப்பட்டுள்ள விண்ணப்ப முடிவுத் திகதியன்றுள்ளவாறு) :-
வருடங்கள் :-----, மாதங்கள் :-----, நாட்கள் :-----.

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----; மார்பு : (அங்குலம்) :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

10. மேலதிகத் தகைமைகள் (சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்கவும்) :-----.

11. திருமணம் ஆனவரா/ஆகாதவரா ? :-----.

12. (அ) தற்போது செய்யும் தொழில் :-----.

(ஆ) நீங்கள் இலங்கை ஆயுதப்படை அங்கத்தவரா ? :-----.

13. வேறு ஏதேனும் விசேட திறன்கள்/தகைமைகள் உண்டா ? :-----.

14. உங்களைப் பற்றிய தகவல்களைப் பெற்றுக்கொள்ளக்கூடிய உறவினர்கள் அல்லாத இருவரின் பெயர் முகவரிகளைக் குறிப்பிடுக :-

(அ) -----.
(ஆ) -----.

15. நீங்கள் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் சேவை செய்துள்ளீரா ? (ஆம் எனின் அப்பதவியில் இருந்து விலகியதற்கான காரணங்களைக் குறிப்பிடுக ? :-----.

16. (அ) நீங்கள் ஆயுதப்படை சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட ஆயுதப்படை சேவையின் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைத்து அனுப்ப வேண்டும் :-----.

17. (அ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருக்கிறீர்களா ? அவ்வாறாயின் குறிப்பிட்ட படைத் தலைவர் ஊடாக விண்ணப்பத்தை அனுப்ப வேண்டும்.

(ஆ) நீங்கள் ஆயுதப்படை தொண்டர் அணிச் சேவையில் இருந்துள்ளீர்களா ? அவ்வாறாயின் அதிலிருந்து விலகியபோது கொடுக்கப்பட்ட சான்றிதழின் பிரதியை இணைக்கவும்.

18. நீங்கள் ஏதாவது குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அல்லது வேறு குற்றம் தொடர்பாக குற்றம்சாட்டப்பட்டு நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டுள்ளீரா ? அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? அவ்வாறாயின் விபரம் தருக. :-----.

19. உங்கள் உறவினர்கள் எவரேனும் குற்றம் தொடர்பாக அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனரா ? அவ்வாறாயின் ஏதேனும் குற்றம் சாட்டப்பட்டு நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டுள்ளனரா? அல்லது குற்றத்துக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளனரா? அவ்வாறாயின் விபரம் தருக :-----.
மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னுடைய அறிவுக்கு எட்டிய வரையில் உண்மையானவையென்றும், சரியானவை யென்றும் வெளிப்படுத்துகின்றேன். மேலே தரப்பட்டுள்ள விபரங்கள் எவையேனும் பிழையானவையென்றோ, பொய்யான வையென்றோ தெரியவரின் நான் பொலிஸ் திணைக்கள சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்டிருப்பினும் எந்த சந்தர்ப்பத் திலும் இலங்கை பொலிஸ் சேவையிலிருந்து உடனடியாக நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

20. திணைக்களத் தலைவரின் சான்றிதழ் (தேவையேற்படின்) :

இந்த விண்ணப்பதாரி ....................................... அவர்கள் இத்திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் எனவும் அவர் விண்ணப்பிக்கும் பதவிக்கு தெரிவுசெய்யப்பட்டால் அவரை இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியும் எனவும் தெரிவிக்கிறேன்.

.................,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரை இடப்பட வேண்டும்.

பதவி :-----.
திகதி :-----.

04-835/1

---

**இலங்கைப் பொலிஸ்**

பொலிஸ் கொஸ்தாபல் பதவி - விசேட அதிரடிப்படை

இலங்கை பொலிஸ் சேவையில் விசேட அதிரடிப் படை பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் பதவி நேரடி ஆட்சேர்ப்பதற்காக இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணும் வகையில் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்கள் "பணிப்பாளர் (ஆட்சேர்ப்பு), பயிலுநர் ஆட்சேர்ப்பு அலுவலகம், இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06" அல்லது கட்டளை அதிகாரி விசேட அதிரடிப்படை தலைமையகம், இல. 223 பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு - 07என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவிப் பெயரினைக் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் 2021.05.31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் மேற்குறிப்பிட்ட முகவரியை வந்தடையுமாறு அனுப்பி வைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பங்கள் வழங்கப்படமாட்டாது.

3. **சம்பள அளவுத்திட்டம்.-**
மாதாந்தம் ரூபா 29,540 - 7 x 300 - 27 x 270 ரூபா 41,630.00.

பொது நிர்வாக சுற்றுநிருபம் இலக்கம் 3-2016 இன் பிரகாரம் வருடாந்த சம்பள அளவுத் திட்டம் மேற்குறிப்பிட்டவாறு அமையும்.

| | |
|---|---|
| (அ) வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : | ரூபா 7,800.00 |
| (ஆ) இடைக்காலக் கொடுப்பனவு : | ரூபா 2,500.00 |
| (இ) அடிப்படை சம்பளத்தில் 40% கொடுப்பனவு : | ரூபா 11,816.00 |
| (ஈ) அடிப்படை சம்பளத்தில் 33% கொடுப்பனவு | ரூபா 9,748.20 |
| (உ) ஊக்குவிப்பு கொடுப்பனவு : | ரூபா 1,500.00 |

(ஊ) கடினக் கொடுப்பனவுகள் ரூபா 2,000.00
(எ) இணைந்த கொடுப்பனவுகள் ரூபா 9,800.00
(ஏ) வேறு கொடுப்பனவுகள் ரூபா 5,263.20
(ஐ) விவாகமானவருக்கான கொடுப்பனவு ரூபா 300.00
(ஒ) சீருடைகள் சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு ரூபா 250.00

**இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :**

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச மருத்துவ வசதி (வெளிநாடுகளிலும் வைத்திய சிகிச்சைகளை பெறுவதற்கு நிதி மூலமான உதவித்தொகைகளைப் பெற்றுக்கொள்ளும் பொருட்டு) பண உதவிகள் வழங்கப்படும் ;

(இ) சகல சீருடைகளும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) விளையாட்டுத் திறன்களை வளர்த்துக்கொள்வதற்கான வசதிகள் ;

(ஏ) கடமைகளுக்கான பிரயாணச் செலவுகளுடன், கடினமான வேலைகளுக்காகவும் அத்துடன் திறமையான கடமைகளைச் செய்வதற்காகவும் வெகுமதிகளாகப் பணம் வழங்கப்படும்.

(ஊ) விசேட அதிரடிப்படையின் அடிப்படை பயிற்சியை முடித்து விசேட அதிரடிப் படையின் சேவையில் ஈடுபடும் காலப்பகுதியில் மாத்திரம் விசேட அதிரடிப் படையின் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் விசேட கொடுப்பனவுகளைப் பெறுவதற்கான உரிமையுண்டு.

**4. தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

4.1 **வயதெல்லை.**- வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது 18-25 இற்கு இடைப்பட்டதாக இருக்க வேண்டும்.

4.2 **கல்வித் தகைமைகள்.**-

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஊடக மொழியில் திறமைச் சித்தியுடன் விண்ணப்பதாரி ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியெய்தியிருப்பதுடன் திறமைச் சித்தி 04 பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும். மேலும் கணிதப் பாடத்தில் இரு தடவைக்கு மேற்படாத தவணையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

**குறிப்பு 01** - இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாடங்கள் வகைப்படுத்தலின்படி பாட எண் 41, 44 அழகியற் கலைகள் என்பன ஒரே பாடமாகவும், எண் 42 மற்றும் 45 அழகியற் கலைகள் என்பன ஒரே பாடமாகவும் கவனிக்கப்பட்டு பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 02** - க.பொ. த. (சா.த.) பரீட்சையில் கணினிப் பாடத்தில் எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தாது அப்பாடத்தில் செய்முறைப் பரீட்சையில் சித்தியெய்தியிருப்பின் அப்பாடத்தில் சித்தி அடையாத தாகவே கருதப்படும்.

**குறிப்பு 03** - வேறு தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்கள பாடங்கள் க. பொ. த. (சா. த.) பரீட்சை அட்டவணைக்குட்படாமையினால் அப்பாடங்களில் சித்தியடைந்திருந்தாலும் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தியடைந்ததாகக் கருதப்படமாட்டாது.

4.3 **உடற்தோற்றம் :**

* உயரம் : 05 அடி 04 அங்குலம் (குறைந்தது)
மார்பளவு : 30 அங்குலம் (குறைந்தது மூச்சுக்காற்று அற்ற)

4.3.1 ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் கடமையாற்றவும் பதவியின் கடமையினை நிறைவேற்றவும் போதியளவு மனத்தைரியமும் உடலுறுதியும் இருத்தல் வேண்டும்.

4.3.2 **கட்புல தொழிற்பாடு.**- மூக்குக் கண்ணாடி ஒரு சோடி அல்லது கண்வில்லை இன்றி ஒவ்வொரு கண்ணினதும் குறைந்தளவு பார்வை 6/12 இற்கு குறையாதிருத்தல் வேண்டும். ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவிருக்கும் போது மற்றைய கண்ணானது 6/18 ஆகவிருத்தல் வேண்டும்.

4.3.3 பொலிஸ் சேவையின் கௌரவத்திற்கு பொருந்தாத மற்றும் கடமைக்குத் தடையான வகையில் அறுவைச் சிகிச்சை மூலம் உடலுறுப்புக்கள் பொருத்தப்பட்ட ஊனமுற்றவராக அல்லாதிருத்தல் வேண்டும்.

4.4 **வேறு தகுதிகள் .**-

4.4.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.
4.4.2 விண்ணப்பதாரி குற்றச்செயல்களில் ஈடுபடாத ஒழுக்கமானவராக இருத்தல் வேண்டும்.
4.4.3 விண்ணப்பதாரி திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விதவைகள் மற்றும் திருமணமாகாத பிள்ளைகள் அற்றவர்களாக இருத்தல் வேண்டும்.)
4.4.4 நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் கடமையாற்ற தயாராக இருத்தல் வேண்டும்.
4.4.5 பதவிக்கு சேர்வதற்கு தேவையான 4:1, 4:2 ஆகிய தகுதிகளை விண்ணப்பப் படிவம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும் என்பதுடன் 4 : 4 இல் கோரப்பட்டுள்ள தகுதிகள் சேர்த்துக் கொள்ளப்படும் தினத்தன்று அவ்வாறே இருத்தல் வேண்டும்.

5. **ஆரம்ப பரீட்சை.**- விண்ணப்பம் செய்துள்ள விண்ணப்பதாரிகள் மத்தியில் தகுதிகளையும் வயதெல்லையையும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே ஆரம்ப பரீட்சைக்கு அழைக்கப்படுவர் அப்பரீட்சையில் பந்தி 4.3 (4:3:2 மற்றும் 4:3:3 தவிர்ந்த) மற்றும் 4:4 (4:4:2 மற்றும் 4:4:4 தவிர்ந்த) தகுதிகள் பரிசீலிக்கப்படும்.

ஆரம்ப பரீட்சைக்கு சமுகமளிக்கும் விண்ணப்பதாரிகள் பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும் சபையினால் நடாத்தப்படும் தேகாரோக்கிய பரிசோதனைக்கு சமுகமளித்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தேகாரோக்கிய பரிசோதனையின் போது அதற்கு முகம் கொடுக்க தகுதியானவர்கள் என அழைப்புக் கடிதத்துடன் இணைத்து அனுப்பப்படும் விண்ணப்பம் இலங்கை வைத்திய சபையில் பதிவு பெற்ற வைத்தியரின் சிபாரிசுக் கடிதத்துடன் அவ்வேளையிலேயே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

| செயற்பாடு | காலம் | புள்ளிகள் |
|---|---|---|
| ஓட்ட தூரம் / Run meters 1000 மீற்றர் | 03 நிமிடங்களிற்குக் குறைவாயின் | 30 |
| | 03-04 நிமிடங்களிற்கிடையில் | 20 |
| | 04-05 நிமிடங்களிற்கிடையில் | 10 |

| செயற்பாடு | காலம் | புள்ளிகள் |
|---|---|---|
| Chinup (05 தடவைகள்) | 01 நிமிடம் | ஒரு தடவைக்கு 03 புள்ளிகள் படி ஆகக்கூடியது 15 புள்ளிகள் |
| Pushup (15 தடவைகள்) | 01 நிமிடம் | தடவைக்கு 01 புள்ளிப் படி கூடியது 15 புள்ளிகள் |
| Situp (15 தடவைகள்) | 01 நிமிடம் | தடவைக்கு 01 புள்ளிப் படி கூடியது 15 புள்ளிகள் |
| Squat Thrust (15 தடவைகள்) | 01 நிமிடம் | தடவைக்கு 01 புள்ளிப் படி கூடியது 15 புள்ளிகள் |
| Kim Gem (ஞாபக சக்தியை பரிசோதித்தல் | தேர்வுசெய்த வகைச் செயற்பாட்டை மேற்பார்வை செய்வதற்கு 30 நொடிகள், ஞாபக சக்திக்கு 30 நொடிகள் எழுத்துக்கு 120 நொடிகள் | ஒரு செயலிற்கு 01 புள்ளிப் படி ஆகக்கூடியது 10 புள்ளிகள் |

**குறிப்பு.**- 1000 மீற்றர் தூரத்தினை 05 நிமிடங்களில் ஓட இயலாத விண்ணப்பதாரிகள் தேகாரோக்கிய பரீட்சையில் சித்தியடையாதவர்களாக கணிக்கப்படுவர். அத்துடன் மேற்குறிப்பிட்ட பரீட்சையில் 100 இற்கு 60 புள்ளிகள் வெட்டுப் புள்ளிகளாக கருதப்பட்டு அதற்கு மேல் எடுக்க வேண்டும்.

06. **எழுத்துப் பரீட்சை.**- ஆரம்ப பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் எழுத்துப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். எழுத்துப் பரீட்சை கீழ்வரும் பாடங்களில் இடம்பெறும்.

| பாடங்கள் | ஆகக்கூடிய புள்ளிகளின் தொகை | சித்தியடையத் தேவையான புள்ளி விகிதம் |
|---|---|---|
| 01. புரிந்துணர்வு மற்றும் மொழித்தேர்ச்சி | 50 | 40% |
| 02. பொது அறிவும் புத்தி கூர்மைக்கான பரீட்சை | 50 | |

07. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.**- ஆரம்ப பரீட்சையிலும் எழுத்துப் பரீட்சையிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அனுப்பப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை சபையானது பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | ஆகக்கூடிய புள்ளிகளின் தொகை | தேர்ந்தெடுக்க கவனத்தில் கொள்ளப்படும் ஆகக்குறைந்த புள்ளிகளின் தொகை |
|---|---|---|
| 1. மேலதிகக் கல்வித்தகைமைகள் | 15 | தேவையற்றது |
| 2. தொழில் தகைமைகள் | 15 | |
| 3. மொழித் தகைமைகள் | 10 | |
| 4. விளையாட்டுத் திறமைகள் | 20 | |
| 5. தலைமைத்துவம்/பொது சேவைகள் | 20 | |
| 6. நேர்முகப் பரீட்சை சபையின் பாராட்டு | 20 | |
| மொத்தம் | 100 | |

08. **இணைத்துக்கொள்ளப்படும் முறை.**- எழுத்துப் பரீட்சையிலும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளை கூட்டி விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளை அவரோகண முறைப்படி பட்டியல் தயாரிக்கப்படும். அப்புள்ளிகள் வரிசைப்படுத்தப்பட்டு அதன் படி வெற்றிட எண்ணிக்கையின் 125% விண்ணப்பதாரிகள் கணக்கெடுத்து பின்னணிப் பரீட்சைக்கும் மற்றும் வைத்திய பரீட்சைக்கும் அழைக்கப்பட்டு அதில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மூலம் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பதவிகளிற்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

**குறிப்பு.**- *மேற்படி திட்டத்திற்கு புறம்பாக உள்ளூர், சர்வதேச மட்டத்தில் தேசிய மட்டத்தில் அல்லது விஷேட விளையாட்டுத் திறமையினைப் பெற்றுள்ள அல்லது வேறு துறைகளில் சிறப்பான அல்லது திறமையினை வெளிப்படுத்தியுள்ள விண்ணப்பதாரி ஒருவரின் உயரம் மற்றும் மார்பளவு சம்பந்தமான தகைமைகள் கவனத்தில் கொள்ளாது ஏனைய தகுதிகள் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் அதிகாரமளிக்கப்பட்ட தேர்வு அதிகாரியின் தீர்மானத்திற்கமைய இணைத்துக்கொள்ளப்படுவார்.*

09. **பின்னணிப் பரீட்சை.**-

9.1 எழுத்துப் பரீட்சையிலும் மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளை கூட்டி விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளை அவரோகணப்படி தயாரிக்கப்பட்டு அப்புள்ளிகள் வரிசைப்படுத்தப்பட்டு அதன் படி வெற்றிட எண்ணிக்கையின் அடிப்படையில் விண்ணப்பதாரிகளுக்கு ஏதேனும் பாதகமான அறிக்கைகள் உண்டா சம்பந்தமான சம்பந்தமாக பின்னணிப் பரீட்சை மேற்கொள்ளப்படும்.

9.2 இங்கு விண்ணப்பதாரியின் பாதகமான அறிக்கைகள் உறுதிப்படுத்திக் கொள்ள அவரும் அவரது நெருங்கிய உறவினர்கள், அவருடன் நெருங்கிப் பழகியவர்களதும் பாதகமான அறிக்கைகள் மற்றும் பழக்கவழக்கங்கள் சம்பந்தமாக விசாரணை செய்யப்படும் என்பதுடன் பாதகமான அறிக்கைகள் உடைய விண்ணப்பதாரிகள் இணைத்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

9.3 ஆட்சேர்ப்பின் போது விண்ணப்பதாரிகள் பொய்யான தகவல்களை வழங்குதல் அவர் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகுதியன்று. பொய்யான தகவல்களை வழங்கியமை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எந்த வேளையிலும் அவர்கள் சேவையிலிருந்து அகற்றப்படுவார்.

10. **வைத்தியப் பரீட்சை.**- பாதமான அறிக்கையற்ற விண்ணப்பதாரிகள் மட்டுமே வைத்திய பரிசோதனைக்கு அழைக்கப்படுவர். தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள். பொலிஸ் வைத்தியசாலையின் பிரதான வைத்திய அதிகாரியுள்ளிட்ட வைத்திய சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். இங்கு விண்ணப்பதாரிகள் பொலிஸ் கடமைக்கு தகுதியானவரென உடற்தேர்வு மற்றும் மனநல சௌக்கியம் சம்பந்தமான பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவர். வைத்திய பரீட்சைக்கு ஒரு தரம் மட்டுமே உட்படுத்தப்படுவர். வைத்திய பரீட்சை சுகாதார பத்திரம் 169 இற்கமைய மேற்கொள்ளப்படும். வைத்திய சபையினால் நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகள் மேன்முறையீடு செய்ய முடியாது.

11. **பயிற்சி.**-

11.1 மேற்படி பரீட்சைகள் அனைத்திலும் சித்தியெய்திய விண்ணப்பதாரிகள் மட்டுமே காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைய பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும் தினத்தில் பயிற்சிக்கு அழைக்கப்படுவர். அடிப்படை பயிற்சிகள் இலங்கைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் நடாத்தப்படுவதுடன் அதன் பின்னர் கட்டாய சேவைப் பயிற்சிக் காலம் நிறைவடையும் வரை அத்துறைக்குரிய பயிற்சி வழங்கப்படும்.

11.2 அடிப்படை பயிற்சிகளை வெற்றிகரமாக முடிக்கத் தவறும் உத்தியோகத்தர்களின் அடிப்படை பயிற்சிக் காலத்தை நீடித்தல் அல்லது தேவைக்கேற்ப நியமனம் இரத்துச் செய்தல் என்பன நியமன அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்.

12. **பதவியின் தன்மை.**- நிரந்தரமானதும் ஓய்வூதியம் கொண்டதுமாகும். (ஓய்வூதிய வேதன முறைமை சம்பந்தமாக அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களிற்கு கீழ்படிதல் வேண்டும்.)

13. **சேவை நிபந்தனைகள்.**-

13.1 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் மேற்குறித்த 13 : 3 பிரிவிற்கு கீழ்பட்டு மூன்று (03) வருடங்கள் பயிலுநர் சேவைக் காலத்தினை பூர்த்தி செய்தல் வேண்டும்.

13.2 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் அரச கரும மொழிக் கொள்கையினை செயற்படுத்திட தற்போதைய அமுலிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் ஏற்படுத்தப்படும் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளல் மற்றும் அதன் மூலம் அது சம்பந்தமாக கலந்துரையாடப்பட்ட ஏதேனும் கட்டளையின் மீது அதற்கு அனுகூலமாக செயற்படல் வேண்டும்.

13.3 தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் சுற்று நிருபம், தாபனக் கோவை ஒழுங்குப்படுத்தல் நிதி ஒழுங்கு விதிகள், அரச நிர்வாக சுற்று நிருபங்கள் திறைசேரி சுற்று நிருபம், இலங்கைப் பொலிஸ் கட்டளை, பொலிஸ் வர்த்தமானி அறிவித்தல், பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபம், பொலிஸ் ஆலோசனை சட்டங்களின் ஒழுங்கு விதிகள் மற்றும் நியமனக் கடிதத்திலுள்ள நிபந்தனைகளிற்குக் கட்டுப்படல் வேண்டும்.

13.4 பயிலுநர் சேவைக் காலமானது நியமனத் திகதியிலிருந்து முதல் 03 வருடங்கள் வலுவில் இருப்பதுடன் அக்காலத்திற்குள் உத்தியோகத்தர்களிற்கு திருமணம் முடிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது. திருமணம் முடிக்க முடியுமானது பொலிஸ் சுற்று நிருபங்களில் வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளின் பிரகாரம் மட்டுமே. இந்த ஒழுங்கு விதிகள் மீறப்படும் பட்சத்தில் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

13.5 ஆட்சேர்ப்புச் செய்யப்படும் விண்ணப்பதாரிகள் பயிற்சி நிறைவின் பின்னர் 05 வருடங்கள் கட்டாய சேவையினை மேற்கொள்ளல் வேண்டும். இந்த கட்டாய சேவைக் காலத்தை நிறைவு செய்யும் முன்னர் எவரேனும் ஏதேனும் பதவியிலிருந்து சுயமாக விலகிட முற்படுவாராயின் அவரிற்கான பயிற்சிகள் மற்றும் சீருடையுள்ளிட்ட ஏனைய செலவுகளிற்காக தீர்மானிக்கப்படும் தொகை அனைத்தும் விலகிச் செல்வதற்கான கடிதத்தினை கையளிக்கும் போதே செலுத்தும் விருப்பத்தை தெரிவிக்கும் ஒப்பந்தத்திற்கு வருதல் வேண்டும். விலகிச் செல்வது சம்பந்தமாக தாபனக் கோவை ஒழுங்குபடுத்தல் விதிகள்/பொதுச் சேவை ஆணைக்குழுவின் சுற்று நிருப ஒழுங்குவிதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13.6 நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் பொலிஸ் சேவையில் முதல் தடவையாக இணைத்துக் கொள்ளப்படும் போது தன்னிடமிருக்கும் சொந்தச் சொத்துக்கள் அல்லது பெயரில் எழுதப்பட்ட அல்லது சட்டரீதியாக பாரமளிக்கப்பட்ட அல்லது எல்லாவிதமான சொத்துக்கள் சம்பந்தமாகவும் தன்னிடமுள்ள பொறுப்புக்கள் சம்பந்தமான விபரங்கள் தனது தனிப்பட்ட கோவையில் உள்வாங்க (திருத்தப்பட்ட) இலக்கம் 261 எனும் பொதுப் படிவத்தில் பதிவிட்டு பொலிஸ் மா அதிபரிற்கு அனுப்புதல் வேண்டும்.
உத்தியோகத்தர் திருமணம் முடித்தவுடன் மேற்கூறப்பட்ட விபரங்களையும் மனைவியினது விபரங்களையும் உள்ளடக்கி வழங்குதல் வேண்டும்.

மேலே விபரிக்கப்பட்டவாறு புதிய உரித்து அல்லது சொத்து கிடைக்கப்பெற்றால் அவ்வாறு பெற்றுக்கொள்ளப் பட்ட உரித்து அல்லது சொத்து சம்பந்தமாகவும் முழு விபரங்கள் தனது தனிப்பட்ட கோவையில் உள்ளடக்க ஒவ்வொரு உத்தியோகத்தரும் எழுத்துமூலமாக பொலிஸ் மா அதிபரிற்கு அறிவித்தல் வேண்டும்.

13.7 பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல்கள் இலங்கைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் அல்லது விசேட அதிரடிப்படை பயிற்சி முகாம் கட்டுக்குருந்தை பயிற்சியினை ஆரம்பித்தவுடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கு அமைவாக செயற்படுவேன் என்று உறுதிகூறி சத்தியப்பிரமாணம் கொடுத்தல் வேண்டும்.

14. **நியமனம் நிரந்தரமாக்கல்.**- நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களினதும் 03 வருட பயிலுநர் சேவைக் கால முடிவில் உத்தியோகத்தர்களின் தொழில் தருநரினால் நிரந்தர நியமனம் வழங்கப்படும். பயிலுநர் சேவை காலத்தில் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடையாவிட்டால் உத்தியோகத்தரின் முதுநிலையானது மேலதிக கால அடிப்படையில் நடைமுறை விதிகளின்படி தீர்மானிக்கப்பட்டு சேவை நிரந்தரமாக்கப்படும்.

அப்படியானாலும் மேலதிக 03 வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய தவறும் உத்தியோகத்தர்களினது நியமனம் நிரந்தரமாக்குதல் அல்லது பயிலுநர் காலத்தை நீடிப்பது சம்பந்தமாக நியமனம் வழங்கும் அதிகாரம் பெற்றவர் தீர்மானித்தாலன்றி நியமனம் முடிவுறுத்தப்படும்.

15. **வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை.**-
வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை நடைமுறைப்படுத்தல் கீழ் வருமாறாகும்.

| வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை விபரம் | வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டியது எத்தனை வருட காலத்திற்கு முன்னர் | வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை தன்மை எழுத்துப் பரீட்சை தொழில் பரீட்சை/சன்றிதழ் பாடநெறி / வேறு |
|---|---|---|
| 1 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை (சேவையை நிரந்தரமாக்கு வதற்கான பரீட்சை) | பொலிஸ் கொஸ்தாபல் பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | எழுத்து, செய்முறை மற்றும் வாய்மொழி |
| 2 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | பொலிஸ் சார்ஜன் பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கான வடிவமைத்தல் பயிற்சிப் பாடநெறி வெற்றிகரமாக பயின்று முடித்தல் |
| 3 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | பொலிஸ் சார்ஜன் மேஜர் பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கான வடிவமைத்தல் பயிற்சிப் பாடநெறி வெற்றிகரமாக பயின்று முடித்தல் |

16. **மொழிப் புலமை.**-

| மொழி | பெற்றுக்கொள்ள வேண்டிய புலமை |
|---|---|
| அரச கரும மொழி | அரச கரும மொழியல்லாத ஊடக மொழியில் சேவையில் இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் உரிய அரச கரும மொழித் திறனை தகுதிகாண் காலத்திற்குள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |
| ஏனைய அரச கரும மொழிகள் | அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் 01/ 2014 மற்றும் அதற்கு துணையான சுற்று நிருபப் படி உரிய மட்டத்திற்கான திறனை பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். |

17. இவ்வர்த்தமானியின் பகுதி I (II அ) ஆம் பந்தியின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட அரச சேவை பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய பொது நிபந்தனைகள் செல்லுபடியாகும்.

18. விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் கடிதக் கோவைகளின் பிரதிகளை தமது விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும். (மூலப் பிரதிகளை சமர்ப்பித்தலாகாது)

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி ;
(இ) கல்வித் தகைமையை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்.

19. (அ) தற்சமயம் அரசாங்க உத்தியோகத்தில் இருக்கும் விண்ணப்பதாரிகள் அவர்களது விண்ணப்பத்தை உரிய நிறுவனத்தின் பிரதானி ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரி தேர்ந்தெடுக்கப்படுவாராயின் அவரை விடுவிக்க முடியுமென்ற சான்றிதழை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தினை 11 × 8 அங்குல அளவான வெள்ளைத் தாளில் தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி உரிய உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்ப் பிரதிகளுடன் மேலே இரண்டாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்குமாறு அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன் எந்தவிதமான காரணத்தினாலும் அது எவரேனும் உத்தியோகத்தரிடமும் தனிப்பட்ட ரீதியில் பாரம் கொடுத்தலாகாது.

20. இந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருக்கும் தேவைப்பாடுகள் எல்லாவகையிலும் உறுதிப்படுத்தத் தவறும் விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும். அவ்வாறான விண்ணப்பதாரிகளுக்கு அது சம்பந்தமாக பதில் அனுப்பப்படமாட்டாது.

**குறிப்பு.**- பரிசீலனை மற்றும் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளிற்கு போக்குவரத்துச் செலவோ அல்லது ஏனைய செலவுகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது.

சீ. டி. விக்ரமரத்ன,
பொலிஸ் மா அதிபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| அலுவலக உபயோகத்திற்கு |
|---|

**இலங்கை பொலிஸ்**

பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் விசேட அதிரடிப் படை பதவி

1. (அ) முழுப் பெயர் :-----.
(தெளிவான பெரிய எழுத்துக்களில்) ஆட்களைப் பதிவு செய்யும் அடையாள அட்டையில் உள்ளவாறு இருத்தல் வேண்டும்) :-----.

(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.

(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :-----.
(தேசிய அடையாள அட்டையின் நிழற் பிரதியை இணைத்து அனுப்பவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரி பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்திற்கான பிரதேச செயலகம் :----. மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.
(ஆ) தற்போதைய முகவரி அமைந்துள்ள பொலிஸ் பிரிவு :-----.
(இ) நிரந்தர முகவரி :-----.
(ஈ) நிரந்தர முகவரி அமைந்துள்ள பொலிஸ் பிரிவு :-----.
(உ) கடிதங்கள் பரிமாறப்படவேண்டிய முகவரி :-----.
(ஊ) நிரந்தர முகவரிக்கான கிராம அலுவலர் பிரிவு :-----. பிரதேச செயலகம் :-----.
(எ) தொலைபேசி இலக்கம் வீடு :-----, கையடக்கத் தொலைபேசி இலக்கம் :-----.
(ஏ) மின்னஞ்சல் முகவரி :-----.

6. (அ) இனம் :-----.

(ஆ) நீர் இலங்கைப் பிரசையானது பரம்பரையாகவா ? இல்லையாயின் பிரஜாவுரிமைபெற்றா ? (பிரஜாவுரிமை பெற்றாயின் அச் சான்றிதழின் நிழற்பிரதியை இணைக்கவும்) :-----.

(இ) நீர் இலங்கைப் பிரசையானது பரம்பரையாகவெனின் பிறந்த இடம் :-

(1) விண்ணப்பதாரர் :-----.
(2) விண்ணப்பதாரரின் தந்தை :-----.
(3) விண்ணப்பதாரரின் தந்தையின் பாட்டன் :-----.
(4) விண்ணப்பதாரரின் தந்தையின் பூட்டன் :-----.

7. பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் நிழற் பிரதியை இணைக்கவும்)

வயது :---- (வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்ப முடிவுத் திகதியன்று) :-

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----; மார்பளவு (அங்குலம்) :-----.

9. கல்வித் தகைமைகள் : (சித்தியடைந்துள்ள பரீட்சைகளைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக்க வும்) :-----.

10. திருமணமானவரா/திருமணமாகாதவரா ? :-----.

11. (அ) தற்சமயம் செய்யும் தொழில் :-----.

(ஆ) நீர் ஆயுதப்படை உறுப்பினரா ? :-----.

12. நீர் இதற்கு முன்னர் பொலிஸ் சேவையில் இருந்துள்ளீரா ? பதவி/சீருடை இலக்கம் :-----.
அவ்வாறாயின் நீர் அப்பதவியிலிருந்து விலகியமைக்கான காரணத்தைக் குறிப்பிடுக ? :-----.

13. (அ) நீர் ஆயுதப்படையில் சேவை செய்கின்றீரா ? அவ்வாறாயின் விண்ணப்பத்தை உரிய படைத்தள பிரதானி ஊடாக சமர்ப்பிக்கவும்.

(ஆ) நீர் ஆயுதப்படையில் சேவை செய்துள்ளீரா ? அவ்வாறாயின் விலகியபோது வழங்கப்பட்ட அச்சான்றிதழின் நிழற் பிரதியை இணைக்கவும் :-----.

14. (அ) நீர் ஆயுத தொண்டர் படையில் இணைந்து சேவை செய்கின்றீரா ? அவ்வாறாயின் விண்ணப்பத்தை உரிய படைத்தள பிரதானி ஊடாக சமர்ப்பிக்கவும். ----------------------.

(ஆ) நீர் ஆயுத தொண்டர் படையில் சேவை செய்துள்ளீரா ? அவ்வாறாயின் விலகியபோது வழங்கப்பட்ட அச்சான்றிதழின் நிழற் பிரதியை இணைக்கவும்.

15. நீர் ஏதேனும் குற்றத்திற்காகவோ அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அத்துடன் ஏதேனும் குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டு அல்லது நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டு அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? (அவ்வாறாயின் விபரத்தைக் குறிப்பிடவும்) :------------.

16. உமது உறவினர் எவரேனும் ஒருவர் ஏதேனும் குற்றத்திற்காக அல்லது சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனரா? அத்துடன் ஏதேனும் குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டு அல்லது நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டு அல்லது தண்டனை பெற்றுள்ளனரா? (அவ்வாறாயின் விபரத்தைக் குறிப்பிடவும்) :---------.

மேற்படி விடயங்கள் என் அறிவுக்கு எட்டிய படியும் நம்பிக்கைப் படியும் உண்மையானதென்றும், உறுதிப்படுத்துகின்றேன். அத்துடன் மேற்படி தகவல்கள் பிழையானது அல்லது பொய்யானவை என்று தெரியவந்தால் நான் சேவையில் இணைக்கப்பட்டிருந்தாலும் எவ்வேளையிலும் இலங்கைப் பொலிஸ் சேவையை உடனடியாக இடைநிறுத்த கீழ்படிய வேண்டும் என்பதை அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

17. நிறுவனத் தலைவரின் சான்றிதழ் (தேவை ஏற்படின்) :

இவ் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ....................................... அவர்கள் --------- திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் என்றும் அவர் இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியுமென்று தெரிவிக்கின்றேன்.

.................,
நிறுவனத் தலைவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பதவி :-----.
திகதி :-----.

04-835/2

---

**இலங்கைப் பொலிஸ்**

பொலிஸ் கொஸ்தாபல் சாரதி - விசேட அதிரடிப்படை பதவி

இலங்கை பொலிஸ் சேவையில் விசேட அதிரடிப் படை பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி நேரடி ஆட்சேர்ப்பதற்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. கீழ்க்காணப்படும் மாதிரி விண்ணப்பப் படிவத்தின் படி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து பணிப்பாளர், பயிலுநர் ஆட்சேர்ப்புப் பகுதி, இல. 375, 1 ஆம் மாடி, ஸ்ரீ சம்புத்தத்வ ஜயந்தி மாவத்தை, கொழும்பு 06'' அல்லது கட்டளை அதிகாரி விசேட அதிரடிப்படை தலைமையகம், பௌத்தாலோக மாவத்தை, கொழும்பு - 07 எனும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தினை அனுப்பும் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் நீங்கள் விண்ணப்பிக்கும் பதவியினைக் குறிப்பிட்டு அதனை பதிவுத் தபாலில் 2021.05.31 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் மேலே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். தாமதித்துக் கிடைக்கும் விண்ணப்பப் படிவங்கள் சம்பந்தமாக எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படமாட்டாது என்பதுடன் இலங்கைப் பொலிஸினால் விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

3. **வேதன முறைமை - மாதாந்தம்.**- ரூபா 29,540 - 7 x 300 - 27 x 270 ரூபா 41,630.00.

இந்த வேதனக் கொடுப்பனவானது அ. நி. சுற்று நிருப இல. 03/2016 இன் படி மேற்கொள்ளப்பட்டது.

| | | |
|---|---|---|
| (அ) | வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவு : | ரூபா 7,800.00 |
| (ஆ) | இடைக்காலக் கொடுப்பனவு : | ரூபா 2,500.00 |
| (இ) | அடிப்படை சம்பளத்தில் 40% கொடுப்பனவு : | ரூபா 11,816.00 |
| (ஈ) | அடிப்படை சம்பளத்தில் 33% கொடுப்பனவு | ரூபா 9,748.20 |
| (உ) | ஊக்குவிப்பு கொடுப்பனவு : | ரூபா 1,500.00 |
| (ஊ) | கடினக் கொடுப்பனவுகள் : | ரூபா 2,000.00 |
| (எ) | இணைந்த கொடுப்பனவுகள் : | ரூபா 9,800.00 |
| (ஏ) | வேறு கொடுப்பனவுகள் : | ரூபா 5,263.20 |
| (ஐ) | விவாகமானவருக்கான கொடுப்பனவு : | ரூபா 300.00 |
| (ஒ) | சீருடைகளை சுத்தம் செய்வதற்கான கொடுப்பனவு | ரூபா 250.00 |

இந்தக் கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக :

(அ) இலவச போக்குவரத்து வசதிகள் ;

(ஆ) உத்தியோகத்தர்களுக்கு இலவச வைத்திய வசதி (வெளிநாட்டில் சிகிச்சை பெற நிதி உதவி பெற்றுக்கொள்ள முடியும்) ;

(இ) சீருடை அனைத்தும் இலவசமாக வழங்கப்படும் ;

(ஈ) உங்களது விளையாட்டுத் திறமை மற்றும் ஏனைய திறமைகளை விருத்தி செய்வதற்கான வசதிகள் ;

(உ) கடமைக்கு செல்வதற்கான கட்டணம் மற்றும் கஷ்டப் பிரதேசக் கடமைக்கானதும் விஷேட கடமைக்கான வெகுமதியாகப் பணப் பரிசுகளும் வழங்கப்படும்.

(ஊ) விசேட அதிரப்படையின் அடிப்படை பயிற்சியை முடித்து விசேட அதிரடிப் படையின் சேவையில் ஈடுபடும் காலப்பகுதியில் மாத்திரம் விசேட அதிரடிப் படையின் ஏனைய உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் விசேட கொடுப்பனவுகளைப் பெறுவதற்கான உரிமையுண்டு.

4. **தேவையான அடிப்படைத் தகைமைகள் :**

4.1 **வயதெல்லை.**- வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று வயது 18-25 இற்கு இடைப்பட்டதாக இருக்க வேண்டும்.

4.2 **கல்வித் தகைமைகள்.**-
க. பொ. த. (சா. தர) பரீட்சையில் கணிதம் மற்றும் ஊடக மொழியுட்பட இரு தடவைக்கு மேற்படாத தடவையில் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

**குறிப்பு** 1- இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பாடங்கள் வகைப்படுத்தலின்படி பாட எண் 41, 44 அழகியற் கலைகள் என்பன ஒரே பாடமாகவும், எண் 42 மற்றும் 45 அழகியற் கலைகள் என்பன ஒரே பாடமாகவும் கவனிக்கப்பட்டு பரீட்சையில் சித்தியெய்திய பாடங்களின் எண்ணிக்கை தீர்மானிக்கப்படும்.

**குறிப்பு 2**-க.பொ. த. (சா/த) பரீட்சையில் கணினிப் பாடத்தில் எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்தாது அப்பாடத்தில் செய்முறைப் பரீட்சையில் சித்தியெய்தியிருப்பின் அப்பாடத்தில் சித்தி அடையாததாகவே கருதப்படும்.

4.3 **தொழில்சார் தகைமைகள்** : இலகுவாகனங்களுக்கும் கனரக வாகனங்களுக்குமான செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்.

**குறிப்பு** 1- **மோட்டார் திருத்தும் அனுபவம் அல்லது மோட்டார் எந்திரவியல் அல்லது வாகனம் செலுத்தும் நீண்டகால அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அழிக்கப்படும்.**

4.4 **உடற்தோற்றம் :**

* உயரம் : 05 அடி 02 அங்குலம் (குறைந்தது)
* மார்பளவு : 30 அங்குலம் (குறைந்தது /மூச்சுக்காற்று அற்ற)

4.4.1 ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் இலங்கையின் எப்பிரதேசத்திலும் கடமையாற்றவும் பதவியின் கடமையினை நிறைவேற்றவும் போதியளவு மனத்தைரியமும் உடலுறுதியும் இருத்தல் வேண்டும்.

4.4.2 **கட்புல தொழிற்பாடு.**- மூக்குக் கண்ணாடி ஒரு சோடி அல்லது கண்வில்லை இன்றி ஒவ்வொரு கண்ணினதும் குறைந்தளவு பார்வை 6/12 இற்கு குறையாதிருத்தல் வேண்டும். ஒரு கண்ணின் பார்வை 6/6 ஆகவிருக்கும் போது மற்றைய கண்ணானது 6/18 ஆகவிருத்தல் வேண்டும்.

4.4.3 பொலிஸ் சேவையின் கௌரவத்திற்கு பொருந்தாத மற்றும் கடமைக்குத் தடையான வகையில் அறுவைச் சிகிச்சை மூலம் உடலுறுப்புக்கள் பொருத்தப்பட்ட ஊனமுற்றவராக அல்லாதிருத்தல் வேண்டும்.

4.5 **வேறு தகுதிகள் .**-

4.5.1 இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

4.5.2 விண்ணப்பதாரி குற்றச்யெல்களில் ஈடுபடாத ஒழுக்கமானவராக இருத்தல் வேண்டும்.

4.5.3 விண்ணப்பதாரி திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும். (விவாகரத்துப் பெற்றவர்கள், விதவைகள் தகுதியற்றவர்.)

4.5.4 நாட்டின் எந்தப் பிரதேசத்திலும் கடமையாற்ற தயாராக இருத்தல் வேண்டும்.

4.5.5 பதவிக்கு சேர்வதற்கு தேவையான 4:1, 4:2 ஆகிய தகுதிகளை விண்ணப்பப் படிவம் கோரப்படும் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும் என்பதுடன் 4 : 4 இல் கோரப்பட்டுள்ள தகுதிகள் சேர்த்துக் கொள்ளப்படும் தினத்தன்று அவ்வாறே இருத்தல் வேண்டும்.

5. **ஆரம்ப பரீட்சை.**- விண்ணப்பம் செய்துள்ள விண்ணப்பதாரிகள் மத்தியில் தகுதிகளையும் வயதெல்லையையும் பூரணப்படுத்தியுள்ள விண்ணப்பதாரிகள் மட்டுமே ஆரம்ப பரீட்சைக்கு அழைக்கப்படுவர் அப்பரிசீலனையில் பந்தி 4.1 மற்றும் 4:4 (4:4:2 மற்றும் 4:4:3 தவிர்ந்த) தகுதிகள் பரிசீலிக்கப்படும்.

ஆரம்ப பரீட்சைக்கு சமுகமளிக்கும் விண்ணப்பதாரிகள் பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும் சபையினால் நடாத்தப்படும் தேகாரோக்கிய பரிசோதனைக்கு சமுகமளித்தல் வேண்டும். விண்ணப்பதாரிகள் தேகாரோக்கிய பரிசோதனையின் போது அதற்கு முகம் கொடுக்க தகுதியானவர்கள் என அழைப்புக் கடிதத்துடன் இணைத்து அனுப்பப்படும் விண்ணப்பம் இலங்கை வைத்திய சபையில் பதிவு பெற்ற வைத்தியரின் சிபாரிசுக் கடிதத்துடன் அவ்வேளையிலேயே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஆரம்ப பரீட்சையில் சித்தியடையும் அனைத்து விண்ணப்பதாரிகளும் தேகாரோக்கிய பரிசீலனைக்கு அனுப்பப்படுவதுடன் அங்கு 1000 மீற்றர் தூரத்தை 05 நிமிடங்களுக்கு குறைவான நேரத்திற்குள் ஓடி முடிந்தால் தேகாரோக்கிய பரிசீலனையில் சித்தியடைந்ததாகக் கணிக்கப்படும்.

06. **தொழில்சார் பரீட்சை.**- ஆரம்ப பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் தொழில்சார் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். தொழில்சார் பரீட்சை கீழ்வரும் பாடங்களில் இடம்பெறும்.

| பாடங்கள் | ஆகக்கூடிய புள்ளிகளின் தொகை | சித்தியடையத் தேவையான புள்ளி விகிதம் |
|---|---|---|
| 01. எழுத்துப் பரீட்சை | 40 | 20 50% |
| 02. செய்முறைப் பரீட்சை | 60 | 30 |

07. **கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை.**- ஆரம்ப பரீட்சையிலும் தொழில்சார் பரீட்சையிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் மட்டுமே கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைக்கு அனுப்பப்படுவர். கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையானது பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும்.

| புள்ளிகள் வழங்கப்படும் பிரதான தலைப்புக்கள் | ஆகக்கூடிய புள்ளிகளின் தொகை | தேர்ந்தெடுக்க கவனத்தில் கொள்ளப்படும் ஆகக்குறைந்த புள்ளிகளின் தொகை |
|---|---|---|
| 1. மேலதிகக் கல்வித்தகைமைகள் | 20 | தேவையற்றது |
| 2. தொழில்நுட்ப அறிவு/மொழி அறிவு/கணினி இயலுமை/வேறு | 20 | |
| 3. விளையாட்டுத் திறமை | 20 | |
| 4. தலைமைத்துவம்/பொது சேவைகள் | 20 | |
| 5. நேர்முகப் பரீட்சை சபையின் பாராட்டு | 20 | |
| மொத்தம் | 100 | |

08. **இணைத்துக்கொள்ளப்படும் முறை.-** தொழில்சார் பரீட்சையிலும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகளை கூட்டி விண்ணப்பதாரிகள் பெற்றுக்கொண்ட மொத்தப் புள்ளிகளை அவரோகண முறைப்படி தயாரிக்கப்படும். அப்புள்ளிகள் வரிசைப்படுத்தப்பட்டு அதன் படி வெற்றிட எண்ணிக்கையின் அடிப்படையில் விண்ணப்பதாரிகள் கணக்கெடுத்து பின்னணிப் பரீட்சைக்கும் மற்றும் வைத்திய பரீட்சைக்கும் அழைக்கப்பட்டு அதில் சித்தியடையும் விண்ணப்பதாரிகள் மூலம் ஏற்பட்டுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பதவிகளிற்குச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

**குறிப்பு.-** மேற்படி வரை முறைகளிற்கு உள்ளூர், சர்வதேச மட்டத்தில் தேசிய மட்டத்தில் அல்லது விஷேட விளையாட்டுத் திறமையினைப் பெற்றுள்ள அல்லது வேறு தராதரத்தில் சிறப்பான அல்லது திறமையினை வெளிப்படுத்தியுள்ள விண்ணப்பதாரி ஒருவரின் உயரம் மற்றும் மார்பளவு சம்பந்தமான தகுதிகள் கவனத்தில் கொள்ளாது ஏனைய தகுதிகள் பூரணப்படுத்தப்பட்டிருப்பின் அதிகாரமளிக்கப்பட்ட தேர்வு அதிகாரியின் தீர்மானத்திற்கமைய இணைத்துக்கொள்ளப்படுவார்.

09. **பின்னணிப் பரீட்சை.-**

9.1 மேற்படி 08 ஆம் பந்திப்படி இணைத்துக்கொள்வதற்கான தகுதியினைப்பெற்ற விண்ணப்பதாரிகள் சம்பந்தமாகவும் நன்னடத்தையை உறுதிப்படுத்த பின்னணிப் பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

9.2 இங்கு விண்ணப்பதாரியின் பாதகமான அறிக்கைகள் இருப்பின் உறுதிப்படுத்திக் கொள்ள அவரும் அவரது நெருங்கிய உறவினர்கள், அவருடன் நெருங்கிப் பழகியவர்களதும் குற்றப்பின்னணி மற்றும் பழக்கவழக்கங்கள் சம்பந்தமாக விசாரணை செய்யப்படும் என்பதுடன் குற்றப்பின்னணி அறிக்கையுடன் விண்ணப்பதாரிகள் இணைத்துக்கொள்ளப்பட மாட்டார்கள்.

9.3 ஆட்சேர்ப்பின் போது விண்ணப்பதாரிகள் பொய்யான தகவல்களை வழங்குதல் அவர் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான தகுதியன்று. பொய்யான தகவல்களை வழங்கியமை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எந்த வேளையிலும் அவர்கள் சேவையிலிருந்து அகற்றப்படுவார்.

10. **வைத்தியப் பரீட்சை.-** பாதமான அறிக்கையற்ற விண்ணப்பதாரிகள் மட்டுமே வைத்திய பரிசோதனைக்கு தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள். பொலிஸ் வைத்தியசாலையின் பிரதான வைத்திய அதிகாரியுள்ளிட்ட வைத்திய சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும். இங்கு விண்ணப்பதாரிகள் பொலிஸ் கடமைக்கு தகுதியானவரென உடற்தேர்வு மற்றும் மனநல சௌக்கியம் சம்பந்தமான பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுவர். வைத்திய பரீட்சைக்கு ஒரு தரம் மட்டுமே உட்படுத்தப்படுவர். வைத்திய பரீட்சை சுகாதார பத்திரம் 169 இற்கமைய மேற்கொள்ளப்படும். வைத்திய சபையினால் நிராகரிக்கப்படும் விண்ணப்பதாரிகள் மேன்முறையீடு செய்ய முடியாது.

11. **பயிற்சி.-**

11.1 மேற்படி பரீட்சைகள் அனைத்திலும் சித்தியெய்திய விண்ணப்பதாரிகள் மட்டுமே காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கமைய பொலிஸ் மா அதிபரினால் நியமிக்கப்படும் தினத்தில் பயிற்சிக்கு அழைக்கப்படுவர். அடிப்படை பயிற்சிகள் இலங்கைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் நடாத்தப்படுவதுடன் அதன் பின்னர் கட்டாய சேவைப் பயிற்சிக் காலம் நிறைவடையும் வரை அத்துறைக்குரிய பயிற்சி வழங்கப்படும்.

11.2 அடிப்படை பயிற்சிகளை வெற்றிகரமாக முடிக்கத் தவறும் உத்தியோகத்தர்களின் அடிப்படை பயிற்சிக் காலத்தை நீடித்தல் அல்லது தேவைக்கேற்ப நியமனம் இரத்துச் செய்தல் என்பன நியமனம் அதிகாரியினால் தீர்மானிக்கப்படும்.

12. **பதவியின் தன்மை.-** நிரந்தரமானதும் ஓய்வூதியம் கொண்டதுமாகும். (ஓய்வூதிய வேதன முறைமை சம்பந்தமாக அரசாங்கத்தினால் எடுக்கப்படும் கொள்கை ரீதியிலான தீர்மானங்களிற்கு கீழ்படிதல் வேண்டும்.)

13. **சேவை நிபந்தனைகள்.-**

13.1 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் மேற்குறித்த 13 . 3 பிரிவிற்கு கீழ்பட்டு மூன்று (03) வருடங்கள் பயிலுநர் சேவைக் காலத்தினை பூர்த்தி செய்தல் வேண்டும்.

13.2 தேர்ந்தெடுக்கப்படும் விண்ணப்பதாரிகள் அரச கரும மொழிக் கொள்கையினை செயற்படுத்திட தற்போதைய அமுலிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் ஏற்படுத்தப்படும் ஏற்பாடுகளுக்கமைய மேற்கொள்ளல் மற்றும் அதன் மூலம் அது சம்பந்தமாக கலந்துரையாடப்பட்ட ஏதேனும் கட்டளையின் மீது அதற்கு அனுகூலமாக செயற்படல் வேண்டும்.

13.3 தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் சுற்று நிருபம், தாபனக் கோவை ஒழுங்குப்படுத்தல் நிதி ஒழுங்கு விதிகள், அரச நிர்வாக சுற்று நிருபங்கள் திறைசேரி சுற்று நிருபம், இலங்கைப் பொலிஸ் கட்டளை, பொலிஸ் வர்த்தமானி அறிவித்தல், பொலிஸ் மா அதிபரின் சுற்று நிருபம், பொலிஸ் ஆலோசனை சட்டங்களின் ஒழுங்கு விதிகள் மற்றும் நியமனக் கடிதத்திலுள்ள நிபந்தனைகளிற்குக் கட்டுப்படல் வேண்டும்.

13.4 பயிலுநர் சேவைக் காலமானது நியமனத் திகதியிலிருந்து முதல் 03 வருடங்கள் வலுவில் இருப்பதுடன் அக்காலத்திற்குள் உத்தியோகத்தர்களிற்கு திருமணம் முடிக்க அனுமதி வழங்கப்படமாட்டாது. திருமணம் முடிக்க முடியுமானது பொலிஸ் சுற்று நிருபங்களில் வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளின் பிரகாரம் மட்டுமே. இந்த ஒழுங்கு விதிகள் மீறப்படும் பட்சத்தில் நியமனம் இரத்துச் செய்யப்படும்.

13.5 எவரேனும் பதவியிலிருந்து சுயமாக விலகிட முற்படுவாராயின் பதவி விலகலானது தாபனக் கோவை விதிகள்/ பொதுச் சேவை ஆணைக்குழுவின் சுற்று நிருப ஒழுங்குவிதிகளின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

13.6 நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களும் பொலிஸ் சேவையில் முதல் தடவையாக இணைத்துக் கொள்ளப்படும் போது தன்னிடமிருக்கும் சொந்தச் சொத்துக்கள் அல்லது பெயரில் எழுதப்பட்ட அல்லது சட்டரீதியாக பாரமளிக்கப்பட்ட அல்லது எல்லாவிதமான சொத்துக்கள் சம்பந்தமாகவும் தன்னிடமுள்ள பொறுப்புக்கள் சம்பந்தமான விபரங்கள் தனது தனிப்பட்ட கோவையில் உள்வாகக (திருத்தப்பட்ட) இலக்கம் 261 எனும் பொதுப் படிவத்தில் பதிவிட்டு பொலிஸ் மா அதிபரிற்கு அனுப்புதல் வேண்டும். உத்தியோகத்தர் திருமணம் முடித்தவுடன் மேற்கூறப்பட்ட விபரங்களையும் மனைவியினது விபரங்களையும் உள்ளடக்கி வழங்குதல் வேண்டும்.

மேலே விபரிக்கப்பட்டவாறு புதிய உரித்து அல்லது சொத்து கிடைக்கப்பெற்றால் அவ்வாறு பெற்றுக்கொள் ளப்பட்ட உரித்து அல்லது சொத்து சம்பந்தமாகவும் முழு விபரங்கள் தனது தனிப்பட்ட கோவையில் உள்ளடக்க ஒவ்வொரு உத்தியோகத்தரும் எழுத்துமூலமாக பொலிஸ் மா அதிபரிற்கு அறிவித்தல் வேண்டும்.

13.7 பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி இலங்கைப் பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சியினை ஆரம்பித்தவுடன் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பிற்கு அமைவாக செயற்படுவேன் என்று உறுதிகூறி சத்தியப்பிரமாணம் கொடுத்தல் வேண்டும்.

14. **நியமனம் நிரந்தரமாக்கல்.-** நேரடியாக ஆட்சேர்ப்பு செய்யப்படும் அனைத்து உத்தியோகத்தர்களினதும் 03 வருட பயிலுநர் சேவைக் கால முடிவில் உத்தியோகத்தர்களின் தொழில் தருநரினால் நிரந்தர நியமனம் வழங்கப்படும். பயிலுநர் சேவை காலத்தில் முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தியடையாவிட்டால் உத்தியோகத்தரின் முதுநிலையானது மேலதிக கால அடிப்படையில் நடைமுறை விதிகளின்படி தீர்மானிக்கப்பட்டு சேவை நிரந்தரமாக்கப்படும்.

அப்படியானாலும் மேலதிக 03 வருட காலத்திற்குள் முதலாவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய தவறும் உத்தியோகத்தர்களினது நியமனம் நிரந்தரமாக்குதல் அல்லது பயிலுநர் காலத்தை நீடிப்பது சம்பந்தமாக நியமனம் வழங்கும் அதிகாரம் பெற்றவர் தீர்மானித்தாலன்றி நியமனம் முடிவுறுத்தப்படும்.

15. **வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை.-**
வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை நடைமுறைப்படுத்தல் கீழ் வருமாறாகும்.

| வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை விபரம் | வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சையில் சித்தியடைய வேண்டியது எத்தனை வருட காலத்திற்கு முன்னர் | வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை தன்மை எழுத்துப் பரீட்சை தொழில் பரீட்சை/சன்றிதழ் பாடநெறி / வேறு |
|---|---|---|
| 1 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை (சேவையை நிரந்தரமாக்கு வதற்கான பரீட்சை) | பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | எழுத்து, செய்முறை மற்றும் வாய்மொழி |
| 2 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | பொலிஸ் சார்ஜன் சாரதி பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கான வடிவமைத்தல் பயிற்சிப் பாடநெறி வெற்றிகரமாக பயின்று முடித்தல் |
| 3 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | பொலிஸ் சார்ஜன் மேஜர் சாரதி பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கான வடிவமைத்தல் பயிற்சிப் பாடநெறி வெற்றிகரமாக பயின்று முடித்தல் |
| 4 ஆவது வினைத்திறன்காண் தடை தாண்டல் பரீட்சை | பொலிஸ் உப பொலிஸ் பரிசோதகர் (போக்குவரத்து) பதவிக்குச் சேர்ந்து 03 வருடங்கள் கடப்பதற்கு முன்னர் | பதவிக்கான வடிவமைத்தல் பயிற்சிப் பாடநெறி வெற்றிகரமாக பயின்று முடித்தல் |

16. **மொழிப் புலமை.-**

| மொழி | பெற்றுக்கொள்ள வேண்டிய புலமை |
|---|---|
| அரச கரும மொழி | ஆங்கில மொழியில் சேவையில் இணைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் உரிய அரச கரும மொழித் திறனை பொது நிர்வாக சுற்று நிருபம் 01/ 2014 மற்றும் அதற்கு துணையான சுற்று நிருபப் படி உரிய மட்டத்திற்கான திறனை பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும். |
| ஏனைய அரச கரும மொழிகள் | அரசாங்க நிர்வாக சுற்றுநிருபம் 01/2014 மற்றும் அதற்கு துணையான சுற்று நிருபப் படி உரிய மட்டத்திற்கான திறனை பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும். |

17. இவ்வர்த்தமானியின் பகுதி I (II அ) ஆம் பந்தியின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட அரச சேவை பதவிகளுக்கு நியமனம் செய்வதற்குரிய பொது நிபந்தனைகள் செல்லுபடியாகும்.

18. விண்ணப்பதாரிகள் கீழ்க்காணும் கடிதக் கோவைகளின் பிரதிகளை தமது விண்ணப்பத்துடன் சேர்த்து அனுப்புதல் வேண்டும். (மூலப் பிரதிகளை சமர்ப்பித்தலாகாது)

(அ) பிறப்புச் சான்றிதழ் ;
(ஆ) தேசிய ஆள் அடையாள அட்டையின் பிரதி ;
(இ) கல்வித் தகைமையை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்.

19. (அ) தற்சமயம் அரச உத்தியோகத்தில் இருக்கும் விண்ணப்பதாரிகள் அவர்களது விண்ணப்பத்தை உரிய நிறுவனத்தின் பிரதானி ஊடாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரி தேர்ந்தெடுக்கப்படுவாராயின் அவரை விடுவிக்க முடியுமென்ற சான்றிதழை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பதாரிகள் விண்ணப்பத்தினை 11 × 8 அங்குல அளவான வெள்ளைத் தாளில் தமது சொந்தக் கையெழுத்தில் பூரணப்படுத்தி உரிய உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழ்ப் பிரதிகளுடன் மேலே இரண்டாவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்குக் கிடைக்குமாறு அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன் எந்தவிதமான காரணத்தினாலும் அது எவரேனும் உத்தியோகத்தரிடமும் தனிப்பட்ட ரீதியில் பாரம் கொடுத்தலாகாது.

20. இந்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டிருக்கும் தேவைப்பாடுகள் எல்லாவகையிலும் உறுதிப்படுத்தத் தவறும் விண்ணப் பங்கள் நிராகரிக்கப்படும். அவ்வாறான விண்ணப்பதாரிகளுக்கு அது சம்பந்தமாக பதில் அனுப்பப்படமாட்டாது.

**குறிப்பு.-** பரிசீலனை மற்றும் நேர்முகத்தேர்விற்கு அழைக்கப்படும் விண்ணப்பதாரிகளுக்கு போக்குவரத்துச் செலவோ அல்லது ஏனைய செலவுகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது.

சீ. டி. விக்ரமரத்ன,
பொலிஸ் மா அதிபர்.

மாதிரி விண்ணப்பப்படிவம்

| அலுவலக உபயோகத்திற்கு |
|---|

**இலங்கை பொலிஸ்**

பயிலுநர் பொலிஸ் கொஸ்தாபல் சாரதி பதவி

1. (அ) முழுப் பெயர் (தெளிவான பெரிய எழுத்துக்களில்) ஆட்களைப் பதிவு செய்யும் அடையாள அட்டையில் உள்ளவாறு இருத்தல் வேண்டும்) :-----.
(ஆ) பெயர் (முதல் எழுத்துக்களுடன்) :-----.
(இ) விண்ணப்பிக்கும் பதவி :-----.

2. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :-----.
(தேசிய அடையாள அட்டையின் நிழற் பிரதியை இணைத்து அனுப்பவும்.)

3. தந்தையின் முழுப் பெயர் :-----.

4. விண்ணப்பதாரி பிறந்த இடம் :-----.

பிறந்த இடத்திற்கான பிரதேச செயலகம் :----. மாகாணம் :-----.

5. (அ) தற்போதைய முகவரி :-----.

(ஆ) தற்போதைய முகவரி அமைந்துள்ள பொலிஸ் பிரிவு :-----.

(இ) நிரந்தர முகவரி :-----.

(ஈ) நிரந்தர முகவரி அமைந்துள்ள பொலிஸ் பிரிவு :-----.

(உ) கடிதங்கள் பரிமாறப்படவேண்டிய முகவரி :-----.

(ஊ) நிரந்தர முகவரிக்கான கிராம அலுவலர் பிரிவு :-----. பிரதேச செயலகம் :-----.

(எ) தொலைபேசி இலக்கம் வீடு :-----, கையடக்கத் தொலைபேசி இலக்கம் :-----.

(ஏ) மின்னஞ்சல் முகவரி :-----.

6. (அ) இனம் :-----.

(ஆ) நீர் இலங்கைப் பிரசையானது பரம்பரையாகவா ? இல்லையாயின் பிரஜாவுரிமைபெற்றா ? (பிரஜாவுரிமை பெற்றாயின் அச் அச்சான்றிதழின் நிழற்பிரதியை இணைக்கவும்) :-----.

(இ) நீர் இலங்கைப் பிரசையானது பரம்பரையாகவெனின் பிறந்த இடம் :-

* விண்ணப்பதாரர் :-----.
* விண்ணப்பதாரரின் தந்தை :-----.
* விண்ணப்பதாரரின் தந்தையின் பாட்டன் :-----.
* விண்ணப்பதாரரின் தந்தையின் பூட்டன் :-----.

7. பிறந்த திகதி :-----.
(பிறப்புச் சான்றிதழின் நிழற் பிரதியை இணைக்கவும்)
வயது (வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் விண்ணப்ப முடிவுத் திகதியன்று) :-

8. உயரம் : அடி :-----, அங்குலம் :-----; மார்பளவு (அங்குலம்) :-----.

9. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்துள்ள பரீட்சைகளைக் குறிப்பிட்டு சான்றிதழ்களின் பிரதிகளை இணைக் கவும்) :-----.

10. திருமணமானவரா/திருமணமாகாதவரா ? :-----.

11. (அ) தற்சமயம் செய்யும் தொழில் :-----.

(ஆ) நீர் ஆயுதப்படை உறுப்பினரா ? :-----.

12. நீர் இதற்கு முன்னர் இலங்கை பொலிஸ் சேவையில் இருந்துள்ளீரா ? பதவி/சீருடை இலக்கம் :-----.
அவ்வாறாயின் நீர் அப்பதவியிலிருந்து விலகியமைக்கான காரணத்தைக் குறிப்பிடுக ? :-----.

13. (அ) நீர் ஆயுதப்படையில் சேவை செய்கின்றீரா ? அவ்வாறாயின் விண்ணப்பத்தை உரிய படைத்தள பிரதானி ஊடாக சமர்ப்பிக்கவும்.

(ஆ) நீர் ஆயுதப்படையில் சேவை செய்துள்ளீரா ? அவ்வாறாயின் விலகியபோது வழங்கப்பட்ட அச்சான்றிதழின் நிழற் பிரதியை இணைக்கவும் :-----.

14. (அ) நீர் ஆயுத தொண்டர் படையில் இணைந்து சேவை செய்கின்றீரா ? அவ்வாறாயின் விண்ணப்பத்தை உரிய படைத்தள பிரதானி ஊடாக சமர்ப்பிக்கவும்.

(ஆ) நீர் ஆயுத தொண்டர் படையில் சேவை செய்துள்ளீரா ? அவ்வாறாயின் விலகியபோது வழங்கப்பட்ட அச்சான்றிதழின் நிழற் பிரதியை இணைக்கவும்.

15. நீர் ஏதேனும் குற்றத்திற்காகவோ அல்லது சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளீரா? அத்துடன் ஏதேனும் குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டு அல்லது நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டு அல்லது தண்டனை பெற்றுள்ளீரா? (அவ்வாறாயின் விபரத்தைக் குறிப்பிடவும்) :-----.

16. உமது உறவினர் எவரேனும் ஒருவர் ஏதேனும் குற்றத்திற்காக அல்லது சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளனரா? அத்துடன் ஏதேனும் குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்டு அல்லது நீதிமன்றத்திற்கு அழைக்கப்பட்டு அல்லது தண்டனை பெற்றுள்ளனரா? (அவ்வாறாயின் விபரத்தைக் குறிப்பிடவும்) :-----.
மேற்படி விடயங்கள் என் அறிவுக்கு எட்டிய படியும் நம்பிக்கைப் படியும் உண்மையானதென்றும், உறுதிப்படுத்துகின்றேன். அத்துடன் மேற்படி தகவல்கள் பிழையானது அல்லது பொய்யானவை என்று தெரியவந்தால் நான் சேவையில் இணைக்கப்பட்டிருந்தாலும் எவ்வேளையிலும் இலங்கைப் பொலிஸ் சேவையை உடனடியாக இடைநிறுத்த கீழ்படிய வேண்டும் என்பதை அறிவேன்.

.................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

17. நிறுவனப் பிரதானியின் அறிக்கை (உரிய பெயர் மட்டும்) :

இவ் விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் ....................................... அவர்கள் ................. திணைக்களத்தில்/ கூட்டுத்தாபனத்தில்/ சபையில் சேவையாற்றுபவர் என்றும் அவர் இந்தப் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டால் இச்சேவையிலிருந்து விடுவிக்க முடியுமென்று தெரிவிக்கின்றேன்.

.................,
நிறுவன பிரதானியின் கையொப்பமும்

பதவி முத்திரையும்.

பதவி :-----.
திகதி :-----.

04-835/3

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

அரசாங்க சேவை ஆணைக்குழு

நாடளாவிய சேவைகளின் பதவிகளுக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான பொதுப் போட்டிப் பரீட்சையை நடாத்துதல் பற்றிய அறிவித்தல்

அரசாங்க சேவையின் நாடளாவிய சேவைகளில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதன் பொருட்டு அந்தந்த சேவைகளுக்கென வெவ்வேறாகப் பரீட்சைகளை நடாத்துவதற்குப் பதிலாக ஒரு போட்டிப் பரீட்சையின் மூலம் தகைமையுடையவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு 2020 நவம்பர் 09 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் போது அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.
அதற்கமைவாக இப் பரீட்சையைப் பின்வருமாறு நடாத்துவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்படும்.

1. **பரீட்சைக் கட்டமைப்பு :-**

இப் பரீட்சையானது இரண்டு பகுதிகளைக் கொண்டமைந்ததாகும். அதாவது,

பகுதி 1 - (பொதுப் பகுதி)

பகுதி 2 - (அந்தந்த சேவைகளுக்கென குறித்துரைக்கப்பட்ட பகுதி)

பகுதி 1 - :- இப் பகுதியானது அனைத்து நாடளாவிய சேவைகளுக்கும் பொதுவானது என்பதுடன், அது பின்வரும் இரண்டு பாடங்களுக்கான 2 வினாப்பத்திரங்களைக் கொண்டமைந்தது.

வினாப்பத்திரம் 1 : நுண்ணறிவுப் பரீட்சை
வினாப்பத்திரம் 2 : கிரகித்தல்

பகுதி 2 :- மேற்குறித்த பகுதி 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள இரண்டு பாடங்களுக்கு மேலதிகமாக அந்தந்த நாடளாவிய சேவைகளுக்குரிய சேவைப் பிரமாணக் குறிப்புக்களில் மேலும் பாடங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின் குறித்த பாடங்கள் பகுதி 2 இன் கீழ் உள்ளடங்கும். (அந்தப் பாடங்கள் பற்றிய விபரங்கள் விண்ணப்பங்கள் கோரப்படும் சந்தர்ப்பத்தில் குறிப்பிடப்படும்.)

2. **பரீட்சை நடாத்தப்படும் முறை :-**

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஆலோசனைப்படி பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் இப் பரீட்சையானது வருடாந்தம் குறிப்பிட்டதொரு காலப்பகுதியில் நடாத்தப்படும். நிகழ்நிலை (Online) மூலமாக விண்ணப்பங்கள் கோரப்படுவதுடன், விண்ணப்பதாரி தான் தகைமை பெறும் நாடளாவிய சேவைகள் அனைத்திற்கும் ஒரே விண்ணப்பப்படிவத்தின் மூலம் விண்ணப்பிக்கக் கூடிய வாய்ப்பு வழங்கப்படும். அதன் போது விண்ணப்பதாரி அந்தந்த சேவைகளுக்கென அடையாளமிடும் விருப்பத் தேர்வு ஒழுங்கினைப் பின்னர் மாற்றம் செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

இப் பரீட்சையானது கொழும்பிலும் வெளிப்புறப் பிரதேசங்களிலும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறு நடாத்தப்படும். பரீட்சைக்கான அனுமதிப் பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட மாட்டாது என்பதுடன், பரீட்சார்த்திகள் இணையத்தளம் மூலம் பதிவிறக்கம் செய்து கொள்ளல் வேண்டும்.

பரீட்சையின் பகுதி 1 இற்கு (பொதுப் பகுதி) அனைத்துப் பரீட்சார்த்திகளும் தோற்றுதல் வேண்டும் என்பதுடன், ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளையும், இரண்டு வினாப்பத்திரங்களுக்குமான புள்ளிகளின் கூட்டுத்தொகையாக 100 அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளையும் பெற்றுக் கொள்ளும் பரீட்சார்த்திகள் மாத்திரம் பரீட்சையின் பகுதி 2 இற்குத் தோற்றுவதற்குத் தகைமை பெறுவர். பரீட்சையின் பகுதி 2 இற்கு ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தகைமை பெற்றுள்ளாரா இல்லையா என்பது குறித்து அறிவிக்கப்படும்.

ஒவ்வொரு பரீட்சார்த்திக்கும் தாம் விண்ணப்பித்துள்ள அனைத்துப் பாடங்களுக்கும் தோற்றக் கூடியவாறு பகுதி 2 இற்கான பரீட்சை நேர அட்டவணை தயாரிக்கப்படும்.

3. **நாடளாவிய சேவைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும் முறை :-**

இப் பரீட்சையின் போது பரீட்சார்த்திகள் அந்தந்த சேவைகளுக்கு அமைவாகப் பெற்றுக் கொள்ளும் புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு அந்தந்த நாடளாவிய சேவையின் சேவைப் பிரமாணக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேர்ந்தெடுக்கப்படுவர். அவ்வாறு தேர்ந்தெடுப்பதன் பொருட்டு இப் பரீட்சை முறையை ஏற்புடையதாகக் கொள்ளும் வகையில் அந்தந்த நாடளாவிய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்புக்களைத் தேவைக்கேற்ப திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.
2021 ஆம் அண்டு முதல் இப் பரீட்சை முறையானது நடைமுறைப்படுத்தப்படுவதுடன், பின்வரும் சேவைகள் மற்றும் பிரிவுகளுக்கு இப் பரீட்சை முறையை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான பிரமாணக் குறிப்புத் திருத்தங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன.

1. இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - திறந்த பிரிவு
2. இலங்கை கணக்காளர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - திறந்த பிரிவு மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட பிரிவு
3. இலங்கை திட்டமிடல் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - திறந்த பிரிவு
4. இலங்கை விஞ்ஞான சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - திறந்த பிரிவு
5. இலங்கை கட்டிடக் கலைஞர் சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்தல் - திறந்த பிரிவு

சேவைப் பிரமாணக் குறிப்புக்களைத் தேவைக்கேற்ப திருத்தம் செய்ததன் பின்னர் ஏனைய நாடளாவிய சேவைகளுக்கும் எதிர்காலத்தில் இப் பரீட்சை முறையை அறிமுகப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். எவ்வாறாயினும், அவ்வாறு திருத்தம் செய்யப்படும் வரை அந்தந்த சேவைகளுக்குத் தற்போது காணப்படும் பரீட்சை முறையானது மாற்றமின்றி செயல்வலுப்பெறும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளையின் பிரகாரம்,

எம். ஏ. பீ. தயா செனரத்,
செயலாளர்,
அரசாங்க சேவைகள் ஆணைக்குழு.

1200/9
ரஜமல்வத்த வீதி
பத்தரமுல்ல

2021.04.58.

4-879

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

## பொருட்கள் விற்பனவும் பிறவும்

**நீதிவான் நீதிமன்றம் -மட்டக்களப்பு**

பகிரங்க ஏல விற்பனைக்கான அறிவித்தல்

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட பின்வரும் பொருட்கள் எதிர்வரும் 2021.05.08 ஆந் திகதி காலை 9.00 மணிக்கு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற வளாகத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

இந் நீதிமன்றப் பதிவாளரின் முன் அனுமதியுடன் அன்றைய தினம் காலை 8.00 மணி முதல் 9.00 மணி வரையான காலப்பகுதியினுள் இந்தப் பொருட்களை பார்வையிட முடியும். இந்தப் பொருட்களுக்கான விலையானது மதிப்பீட்டுப் பெறுமதிக்குக் குறைவாக கேள்விக்குட்படுத்தப்படும் சந்தர்ப்பத்தில் இப் பொருட்களை ஏலத்திலிருந்து மீளப் பெறுவதற்கான அதிகாரம் இந் நீதிமன்றத்திற்கு உண்டு.

இந்தப் பொருட்களை ஏலத்தில் பெறுபவர்கள் அதற்கான பணத்தை உடனடியாக இம்மன்றில் செலுத்திப் பற்றுச் சீட்டைப் பெற்ற பின்னர் அவற்றை உடனடியாக நீதிமன்ற வளாகத்தை விட்டும் அப்புறப்படுத்தப்படல் வேண்டும். இதன்போது காசோலைகள் மற்றும் காசுக்கட்டளைகள் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனை தொடர்பில் ஏதும் முறைப்பாடுகள் தெரிவிப்பதாயின் ஏல விற்பனை இடம்பெறும் சந்தர்ப்பத்திலேயே தெரிவிக்க வேண்டும் என்பதுடன் ஏலவிற்பனையின் பின்னர் தெரிவிக்கப்படும் எந்தவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.

ஏல விற்பனையில் பங்குபற்ற விரும்புபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டை அல்லது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய ஆவணங்களுடன் சமுகமளித்தல் வேண்டும்.

ஏ.சீ. ரிஸ்வான்,
நீதிவான்.

நீதிவான் நீதிமன்றம்,
மட்டக்களப்பு,
2021. 04.09.

**ஏல விற்பனை செய்யப்படும் சான்றுப்பொருட்களின் விபரம்**

| தொ. இல. | வழக்கு இலக்கம் | வாகனப் பதிவு இலக்கம் | சான்றுப்பொருட்களின் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | 38343/PC/16 | - | Ring - 3.7 Gram | 01 |
| 2. | 38343/PC/16 | - | Ring - 2.3 Gram | 01 |
| 3. | AR/432/20 | - | Thaali Chain - 41.5 Gram | 01 |
| 4. | AR/432/20 | - | Gold Coins - 4.1 Gram | 02 |
| 5. | AR/432/20 | - | Thaali Chain Face - 2.1 Gram | 01 |
| 6. | AR/432/20 | - | Bracelet - 3. 3 Gram | 01 |
| 7. | AR/432/20 | - | Panden - 1.6 Gram | 01 |
| 8. | AR/432/20 | - | Earring - 0.9 Gram | 02 |
| 9. | AR/432/20 | - | Chain with Panden - 1.6 Gram | 01 |
| 10. | AR/432/20 | - | Ring - 0.52 Gram | 01 |
| 11. | 4971/PC/12 | - | Bangle - 5.9 Gram | 01 |
| 12. | 4971/PC/12 | - | Chain - 8 Gram | 01 |
| 13. | B/1285/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 14. | B/1285/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 15. | B/1285/20 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 16. | AR/183/21 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 17. | AR/183/21 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 18. | AR/183/21 | | துவிச்சக்கர வண்டி | 01 |
| 19. | B/1285/20 | | காற்றமுத்தி | 03 |
| 20. | | ஆற்று மணல் | | 15 Cube |
| 21. | | ஊத்த மண் | | 08 Cube |

04-809

---

**மாவட்ட/நீதிவான் நீதிமன்றம் - முல்லைத்தீவு**

முல்லைத்தீவு நீதிமன்றில் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான பொருட்கள் ஏல விற்பனை

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் பின்வரும் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் இது வரை உரிமை கோரப்படாததுமான சான்றுப் பொருட்கள் 2021.05.22 ஆந் திகதி இந் நீதிமன்ற வளாகத்தில் வைத்து மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

2. யாராவது இங்கு குறிப்பிட்டுள்ள ஏதாவது பொருட்களில் உரிமைகோருமிடத்து விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு தமது கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

3. பொது மக்கள் மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் விற்பனைக்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு பொருட்களைப் பார்வையிடலாம்.

4. ஏல விற்பனையின்போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதாவது பொருட்களின் மதிப்பு விலை கிடைக்காதவிடத்து அப்பொருளின் ஏல விற்பனையை மீளப்பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.

5. விற்கப்பட்ட பொருட்களுக்கு பணத்தை உடன் செலுத்தி பொருட்களை உடனடியாக நீதிமன்ற வளவில் இருந்து அகற்ற வேண்டும். எல்லாக் கொடுப்பனவும் காசாகவே செய்யப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஏலத்தில் பொருட்களைக் கொள்வனவு செய்பவர்கள் தேசிய அடையாள அட்டையுடன் சமுகம் தர வேண்டும்.

T. சரவணராஜா,
மாவட்ட நீதிபதி.

மாவட்ட/நீதிவான் நீதிமன்றம்,
முல்லைத்தீவு.

**ஏல விற்பனை செய்யப்படும் சான்றுப்பொருட்களின் விபரம்**

பகிரங்க ஏல விற்பனை - 2021

| தொ. இல. | வழக்கு இலக்கம் | விபரம் |
|---|---|---|
| 01. | 9829 (B/747/13) | தண்ணீர் மோட்டர் 1 |
| 02. | 9345 ( B/261/14) | தண்ணீர் மோட்டர் (Singer) 1 |
| 03. | 9829 ( B/747/13) | LED சிங்கர் TV -1 |
| 04. | 7868 ( B/505/13) | DVD டெக் (5135) -1 |
| 05. | 9991 ( B/375/14) | எஞ்சின் (UVW 0219) -1 |
| 06. | 13730( B/593/15) | Samsung Home Thcater (1000 W) -1 |
| 07. | 13730 (B/593/15) | மின் அழுத்தி -1 |
| 08. | 16377 | எரிவாயு கொள்கலன் -1 |
| 09. | 19988 (B/1075/16) | எரிவாயு கொள்கலன், அடுப்பு-1 |
| 10. | 20207 (B/1054/16) | தொலைபேசி Octa Phone -1 |
| 11. | 20207 (B/1054/16) | தொலைபேசி Nokia Phone -1 |
| 12. | 20921 | ரவுட்டர் -1 |
| 13. | 20921 | றில்லர் -1 |
| 14. | 20921 | புலோஹ் (Flovar) -1 |
| 15. | 20921 | பிளனர் இயந்திரம் -1 |
| 16. | 22920 (B/1157/16) | தொலைக்காட்சிப் பெட்டி , Dish -1 |
| 17. | 24267 (B/702/17) | GPS கருவி -1 |
| 18. | 24692 | இயந்திரம் -1 |
| 19. | 25307 | மின்பிறப்பாக்கி -1 |
| 20. | 25633 | Samsung LCD Monitor -1 |
| 21. | 25633 | மடிக்கணினி உதிரிப்பாகங்கள் set -1 |
| 22. | 25633 | Player 1 |
| 23. | 26576 (B/1045/17) | தண்ணீர்க் குழாய் (40' -02") - 1 |
| 24. | 26576 (B/1045/17) | தண்ணீர் மோட்டர்-1 |
| 25. | 27196 | எரிவாயுக் கொள்கலன்-1 |
| 26. | 30093 (B/1005/18) | மின்பிறப்பாக்கி -1 |
| 27. | 30430 (B/808/18) | மின்பிறப்பாக்கி-1 |
| 28. | 33278 (B/282/19) | வீச்சு வலை -1 |
| 29. | 33907 (B/452/19) | GPS கருவி -1 |
| 30. | 33907 (B/452/19) | மின்பிறப்பாக்கி -1 |
| 31. | 34140 (B/645/19) | குளிர்சாதனப் பெட்டி-1 |
| 32. | 35219 (B/1081/19) | எரிவாயு கொள்கலன், அடுப்பு-1 |
| 33. | 39442 (B/595/20) | எரிவாயு கொள்கலன்-1 |
| 34. | AR/590/16 | தண்ணீர் மோட்டர்-1 |
| 35. | AR/590/16 | தண்ணீர் மோட்டர்-1 |
| 36. | AR/389/18 | CD Player with Remote 1 |
| 37. | AR/389/18 | AMB |
| 38. | AR/417/19 | நீர் கொதிகலன் -1 |
| 39. | Concluded Case | இயந்திரம் -1 |
| 40. | Concluded Case | இயந்திரம் -1 |
| 41. | Concluded Case | இயந்திரம் -1 |
| 42. | Concluded Case | இயந்திரம் -1 |
| 43. | Concluded Case | இயந்திரம் -1 |
| 44. | Concluded Case | இயந்திரம் -1 |
| 45. | Concluded Case | இயந்திரம் -1 |
| 46. | Concluded Case | இயந்திரம் -1 |
| 47. | Concluded Case | இயந்திரம் -1 |
| 48. | Concluded Case | இயந்திரம் -1 |
| 49. | 17232 | தொலைபேசி (Grentel) -1 |
| 50. | 17233 | தொலைபேசி (Zigo) -1 |
| 51. | 17233 | தொலைபேசி (Nokia 1280) -1 |
| 52. | 32019 (B/1055/18) | தொலைபேசி (Samsung J5) -1 |
| 53. | 32019 (B/1055/18) | தொலைபேசி (Nokia 1030) -1 |
| 54. | முடிவடைந்த வழக்கு | கோடரி -110 |
| 55. | முடிவடைந்த வழக்கு | மண்வெட்டி-17 |
| 56. | முடிவடைந்த வழக்கு | சவள் -370 |

04-838

---

## உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

**கம்பனியின் நிலை மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்**

**மைலேன்ட் டிவெளப்மண்ட் (பீவீடி) எல்டிடீ**

PV 120588

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவுக்கு ஏற்ப கம்பனியின் விசேட தீர்மானத்தின்படி, 2021, ஏப்பிறல் 09 ஆந் திகதி முதல் மைலேன்ட் டிவெளப்மண்ட் (பீவீடி) எல்டிடீ என்பது மைலேன்ட் டிவெளப்மண்ட்ஸ் லிமிட்டட் என மாற்றப்படுகின்றது.

RKLS கோர்ப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்,
கம்பனிச் செயலாளர்கள்.

4-828

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

துவான் ருக்ஷான் ஓமார் ஆகிய நான், இலக்கம் 267/ 48, சென் மோரி வீதி, எந்தேரமுல்லை, வத்தளையில் வசித்து வந்தவரும், தற்போது 1207B தொகுதி அல்தியாபி கட்டிடத்தில், அல்தியாபி வைத்திய நிலையத்திற்கு அருகில் சாஜா, ஐக்கிய அரபு குடியரசில் வசித்து வருகின்றேன். நான் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறியத்தருவது யாதெனில் 2015, செத்தெம்பர் 22 ஆந் திகதி துவான் அஸ்மி ஓமார், மஹாவில தோட்டம், கொழும்பு -09 இல் வசிப்பவரான இவருக்கு (650/80) இலக்கமுடைய அங்கீகார தத்துவத்தினை வழங்கியிருந்தேன். இத்தத்துவத்தினை நான் முடிவுறுத்துகின்றேன். இத்தத்துவமானது இதற்குப் பின்னர் செல்லுபடியற்றதாக்கப்படுவதுடன் எவ்விதமான சட்டக் கட்டுப் பாடுகளுக்கும் உட்படுத்தப்படமாட்டாது என்பதனை இத்தால் அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

துவான் ருக்ஷான் ஓமார் .

4-793

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

ஹதமுனபிலவல 27/5 இல் வசிக்கும் தொடம்வல மலலசேகர ஸ்ரீயானி ராஜபக்ஷ (தே.அ.அ.இல. 665542521V) ஆகிய என்னால், பிலவல, 27/5 இல் வசிக்கும் குருசிங்ஹ ஆரச்சிகே சுரங்க (தே.அ.அ.இல. 791012643V) என்பவருக்கு 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதி சட்ட வழக்கறிஞர் மிஷேல் ரஃவாயல் என்பவரால் பொறுப்பழித்த அற்றோணித் தத்துவப் பத்திரத்தை இன்று தொடக்கம் இரத்துச் செய்கின்றேன் என அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.

தொடம்வல மலலசேகர ஸ்ரீயானி ராஜபக்ஷ.

4-841

---

### அற்றோணித் தத்துவத்தை மீளப் பெறல்

இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது, 2020.08.07 ஆந் திகதியிடப்பட்டு டெனிஸ் ட்யுபர் சொலிசிட்டர் சைமன் நோபல் சொலிசிட்டர்ஸ், றை ஸ்ரீட், என்பீல்ட் , EN3 4EB , ஐக்கிய இராச்சியம் முகதாவில் இல. 23/4, புனித அந்தோனி வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பைச் சேர்ந்த முத்துலிங்கம் பகீரதன் என்பவரின் பெயரில், இல. 7, றொசைரோ வீதி, மட்டக்களப்பு தற்காலம் இல. 125, கெனில்வர்த் கிறசன்ட், என்பீல்ட் , மிடில்செக்ஸ் , ENI 3RG, ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த நளினி பகீரதன் (திருமணத்திற்கு முன் சத்தியநாதன்) ஆகிய என்னால் நிறைவேற்றப்பட்ட விசேட அற்றோணித் தத்துவப்பத்திரம் 2021.03.05 ஆந் திகதி முதல் மீளப்பெறப்படுவதோடு இரத்தும் செய்யப்படுகிறது. இன்று முதல் அற்றோணித் தத்துவகாரரால் மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நாங்கள் பொறுப்பாக மாட்டோம்.

நளினி பகீரதன்.
(திருமணத்திற்கு முன் சத்தியநாதன்).

2021.03.05.

4-842

---

### அற்றோணித் தத்துவத்தை மீளப் பெறல்

இத்தால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொது மக்களுக்கும் அறியத்தருவதாவது, 2020.08.07 ஆந் திகதியிடப்பட்டு டெனிஸ் ட்யுபர் சொலிசிட்டர், சைமன் நோபல் சொலிசிட்டர்ஸ், றை ஸ்ரீட், என்பீல்ட் , EN3 4EB , ஐக்கிய இராச்சியம் முகதாவில் இல. 23/4, புனித அந்தோனி வீதி, ஜெயந்திபுரம், மட்டக்களப்பைச் சேர்ந்த முத்துலிங்கம் பகீரதன் என்பவரின் பெயரில், இல. 7, றொசைரோ வீதி, மட்டக்களப்பு தற்காலம் இல. 125, கெனில்வர்த் கிறசன்ட், என்பீல்ட் , மிடில்செக்ஸ் , ENI 3RG, ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்த நளினி பகீரதன் ( திருமணத்திற்கு முன் சத்தியநாதன்) ஆகிய என்னால் நிறைவேற்றப்பட்ட விசேட அற்றோணித் தத்துவப்பத்திரம் 2021.03.12 ஆந் திகதி முதல் மீளப்பெறப்படுவதோடு இரத்தும் செய்யப்படுகிறது. இன்று முதல் அற்றோணித் தத்துவகாரரால் மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நாங்கள் பொறுப்பாக மாட்டோம்.

நளினி பகீரதன்.
(திருமணத்திற்கு முன் சத்தியநாதன்).

2021.03.12.

4-843

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு -04, மெல்பர்ன் எவனியு, இல. 16 இல் வசிக்கும் (தேசிய அடையாள அட்டை இல. 702233666V) உடைய) மொஹமட் அஷ்பாக் அப்துல் ரஸாக் ஆகிய நான், கொழும்பு 04, மெல்பர்ன் எவனியு, இல. 16 இல் வசிக்கும் (தேசிய அடையாள அட்டை இல. 761161431V) உடைய) மொஹமட் ரியாஸ் அப்துல் ரஸாக் என்பவருக்கு என்னால் வழங்கப்பட்ட கொழும்பு பிரசித்த நொத்தாரிசு இஸ்ட் ஏ எப் வஸ்னியா என்பவரால் 2015.1.29 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2087 ஆம் இலக்க பொது அற்றோணித் தத்துவப்பத்திரத்தை இன்றைய தினத்திலிருந்து இரத்துச் செய்து செயலிழந்ததாகவும், செல்லுபடியற்றதாகவும் ஆக்கியுள்ளேன் எனவும் இதன் பிறகு குறித்த அற்றோணித் தத்துவப்பத்திரத்தின் கீழ் புரியப்படும் எத்தகைய செயலுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

மொஹமட் அஷ்பாக் அப்துல் ரஸாக் .

2021.04.19.

4-853

---

## ஏல விற்பனைகள்

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

□ 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ரீ.எம். பீ. டி சில்வா அன்ட் சன்ஸ் கம்பனி (பிறைவெற்) லிமிட்டெட்
கணக்கு இல.0198 1000 1340

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2020.12.16 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2021.01.08ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2020.12.28ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான முப்பத்தி இரண்டு கோடியே நாற்பத்தி ஐந்து இலட்சத்து எழுபத்தையாயிரத்து இருநூற்று தொண்ணூறு ரூபா ஐம்பத்தி ஒன்பது சதம் (ரூபா 32,45,75,290.59) 2020, திசெம்பர் 08 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை இருபத்தி ஐந்து கோடியே ஐம்பது இலட்சம் (ரூபா 25,50,00,000.00) கட்டணத்திற்காக at the rate of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு நான்கு தசம் ஐந்து வீதம் (4.5%) மேலும் இரண்டு கோடியே ஐம்பத்தொரு இலட்சத்து பதினைந்தாயிரம் ரூபா (ரூபா 2,51,15,000.00) கட்டணத்திற்காக at the rate of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு இரண்டு தசம் ஐந்து வீதம் (2.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 52, 54, 3125 மற்றும் 3610 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ.கே.ஈ.சேனாபத்தி என்ப வர்கள் மூலமாக 2021.05.24 ஆந் திகதி குறிப்பிடப்பட்ட அட்டவணை இல. 2 இல் அமைந்துள்ள சொத்தை பி.ப. 3.30 மணிக்கும், அட்டவணை இல. 1 இல் அமைந்த சொத்தை மு. ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

#### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணைகள்

1.மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், வத்தளை பிரதேச செயலாளர் பிரிவின் ஹேகித்த இல. 5 கிராம அலுவலர் பிரிவின் அலுத்குரு கோரளே ராகம் பத்துவின் வத்தளை - மாபோல மாநகர சபை எல்லைகளுக்குள் வத்தளையில் அமைந்த எவரிவத்த வீதி வரிமதிப்பீட்டு இல. 9/ 1, 9/ 5, 9/ 6 மற்றும் 9/7 ஐ ஏற்ற "கித்துல்காஹாவத்த மற்றும் கொடலியத்த" எனும் "சுதுவீ கும்புர" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. வீ. விஜயரத்ன என்பவரால் தயாரிக்கப் பட்ட 2016, சனவரி 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 1861 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: ஸ்ட்டீவன் சில்வா மற்றும் ஏனையோர் உரிமம் கோரும் காணி மற்றும் டபிள்யூ. சீ. எம். பெர்ணாண்டோ என்பவர் உரிமை கோரும் காணி ; கிழக்கு: மண்கான் மற்றும் அலோசியஸ் பெர்ணாண்டோ என்பவர் உரிமம் கோரும் காணி, எவரிவத்த வீதி வரிமதிப்பீட்டு இல. 27 ஐ ஏற்ற வளவுகள் ; தெற்கு: அலோசியஸ் பெர்ணாண்டோ என்பவர் உரிமம் கோரும் காணி மற்றும் எவரிவத்த வீதி ; மற்றும் மேற்கு : மண் கான் மற்றும் தர்ஷன டி சில்வா என்பவர் உரிமம் கோரும் காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் நான்கு தசம் சைபர் ஐந்து பேர்ச் (0ஏ.1றூ.4.05பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1861 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட காணி கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும் :

மேற் கூறப்பட்ட வத்தளையில் அமைந்த எவரிவத்த வீதி வரிமதிப்பீட்டு இல. 9/1, 9/5, 9/6 மற்றும் 9/7 ஐ ஏற்ற "கித்துல்காஹாவத்த மற்றும் கொடலியத்த" எனும் "சுதுவீ கும்புர" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். டீ. என். ரீ. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002, மே 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 1458 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன- வடக்கு: ஸ்ட்டீவன் சில்வா மற்றும் ஏனையோர் உரிமம் கோரும் காணி மற்றும் டபிள்யூ. சீ. எம். பெர்ணாண்டோ என்பவர் உரிமை கோரும் காணி ; கிழக்கு: எவரிவத்த வீதி வரிமதிப்பீட்டு இல. 27 ஐ ஏற்ற வளவுகள் மற்றும் அலோசியஸ் பெர்ணாண்டோ என்பவர் உரிமம் கோரும் காணி ; தெற்கு: அலோசியஸ் பெர்ணாண்டோ என்பவர் உரிமம் கோரும் காணி மற்றும் எவரிவத்த வீதி மற்றும் மேற்கு : ஸ்ட்டீவன் சில்வா மற்றும் ஏனையோர் உரிமம் கோரும் காணி மற்றும் லொட் A, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் நான்கு தசம் சைபர் ஐந்து பேர்ச் (0ஏ.1றூ.4.05பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1458 எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பாஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் L 260/ 18 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இல. 52 எனும் ஈட்டு முறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

2. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தேவமெதி ஹத்பத்துவையின் வல்கம்பத்து கோரளே வாரியபொல பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பமுனகொட்டுவை பிரதேச செயலாளர் பிரிவின் ஹேரன் கெதர இல. 1225 கிராம அலுவலர் பிரிவின் தேவமெதி ஹத்பத்துவையின் வல்கம்பத்து கோரளே கொலமுனே மற்றும் நாகனே, படலகம, மடவலகெதர ஆகிய கிராமங்களில் அமைந்த "மாயா எஸ்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. கே. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2015, ஒற்றோபர் 29 ஆந் திகதியிடப்பட்ட இல. 1789 எனும் வரைபடத்தில் அனைத்து பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: எஸ்ட்டேட் வீதி ; கிழக்கு: பமுனா கொட்டுவ முதல் களுகமுவ வரை பிரதான வீதி ; தெற்கு : கிராமவாசிகளுக்கு ஒதுக்கப்பட்ட மாயா எஸ்ட்டேட்டின் ஒரு பகுதி, உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. சீ. எஸ். எம். அபேசேக்கர என்பவரால் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 154/ 93 இன் லொட் 2 மற்றும் கிராமவாசிகளுக்காக ஒதுக்கப்பட்ட மற்றும் உரிமம் கோரும் மாயா எஸ்ட்டேட்டின் ஒரு பகுதி ; மற்றும் மேற்கு : கிராம வாசிகளுக்கு ஒதுக்கப்பட்ட மாயா எஸ்ட்டேட்டின் ஒரு பகுதி மற்றும் மாஹா ராஜா என்பவர் உரிமம் கோரும் மாயா எஸ்ட்டேட்டின் ஒரு பகுதி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் எட்டு ஏக்கர் மற்றும் இருபத்தி ஐந்து தசம் ஆறு பேர்ச் (8ஏ.0றூ.25.6பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1789 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட காணி கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்:

கூறப்பட்ட மடவலகெதர கிராமத்தில் அமைந்த "மாயா எஸ்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. சீ. எஸ். எம். அபேசேக்கர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993, செத்தெம்பர் 17 ஆந் திகதியிடப்பட்ட இல. 154/ 93 எனும் வரைபடத்தில் அனைத்து பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: எஸ்ட்டேட் வீதி ; கிழக்கு: பமுனாகொட்டுவ முதல் களுகமுவ வரை பிரதான வீதி ; தெற்கு : கிராமவாசிகளுக்கு ஒதுக்கப்பட்ட மாயா எஸ்ட்டேட்டின் ஒரு பகுதி, வரைபட இல. 154/93 இன் லொட் 2 மற்றும் கிராமவாசிகளுக்காக ஒதுக்கப்பட்ட மாயா எஸ்டேட்டின் ஒரு பகுதி ; மற்றும் மேற்கு : மாயா எஸ்ட்டேட்டின் லொட் A மற்றும் B, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் எட்டு ஏக்கர் ஒரு றூட் மற்றும் ஐந்து பேர்ச் (8ஏ.1றூ.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 154/ 93 எனும் வரைபடத்திற்கு அமைவாக குருநாகல் காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் Q 23/ 114 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இலக்கங்கள் 54, 3125 மற்றும் 3610 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

4-806

---

### சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

எஸ். பீ. ஏக்கநாயக்க,
கணக்கு இல.0179 5000 2158

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2020.12.16 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2021.04.01ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2020.03.24ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே எழுபத்தியேழு இலட்சத்து மூவாயிரத்து எழுநூற்று எழுபத்தொன்பது ரூபா இருபத்தைந்து சதம் (ரூபா 1,77,03,779.25) 2020, திசெம்பர் 01 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே ஐம்பது இரண்டு இலட்சத்து எண்பத்திதொராயிரத்து எண்ணூற்று அறுபத்தி ஏழு ரூபா ஐம்பது சதம்(ரூபா 1,52,81,867.50) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 3923 மற்றும் 4519 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2021.05.21 ஆந் திகதி முப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

#### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

1. தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம் கோரளே வெலிகம பிரதேச செயலாளர் பிரிவின் மற்றும் பிரதேச சபை எல்லைகளுக்குள் ஹேன்வல- மேற்கு 405 D கிராம அலுவலர் பிரிவிற்குள் மிரிஸ்ஸவில் அமைந்த "கல்கடுவேஹேன இன் லொட் A மற்றும் B இன் லொட் 4 இன் ஒன்றிணைப்பு லொட் 4 A மற்றும் 4C இன் உப பிரிவு " என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். டீ. சேனாரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2014.03.05 ஆந் திகதியிடப்பட்ட இல. 2160 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 4F எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: இதே காணியின் லொட் 3; கிழக்கு: இதே காணியின் லொட் 4B (வீதி), தெற்கு: இதே காணியின் லொட் 4B (வீதி ) மற்றும் இதே காணியின் லொட் 4G மற்றும் மேற்கு: அலுத்தெனிய ஆகிய இவ் எல்லைக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பத்து தசம் மூன்று நான்கு பேர்ச்

(0ஏ.0றூ.10.34பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2160 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாத்தறை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் P 110/23 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. தென் மாகாணம், மாத்தறை மாவட்டம், வெலிகம் கோரளே வெலிகம பிரதேச செயலாளர் பிரிவின் மற்றும் பிரதேச சபை எல்லைகளுக்குள் ஹேன்வல- மேற்கு 405 D கிராம அலுவலர் பிரிவிற்குள் மிரிஸ்ஸவில் அமைந்த "கல்கடுவேஹேன இன் லொட் A மற்றும் B இன் லொட் 4 இன் ஒன்றிணைப்பு லொட் 4 A மற்றும் 4C இன் உப பிரிவு " என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். டீ. சேனாரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 2014.03.05 ஆந் திகதியிடப்பட்ட இல. 2160 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 4G எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: இதே காணியின் லொட் 4F; கிழக்கு: இதே காணியின் லொட் 4B (வீதி), தெற்கு: இதே காணியின் லொட் 4H மற்றும் மேற்கு: அலுத்தெனிய ஆகிய இவ் எல்லைக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் பதினைந்து பேர்ச் (0ஏ.0றூ.15பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும் நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களளுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2160 எனும் வரைபடத்திற்கு அமைவாக மாத்தறை காணிப்பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் P 110/24 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

